பதிவு எண் M. 4900

16-பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 21-5-1949 சனிக்கிழமை மலர் 37.

# ★ நாஸ்தீகமும் சமதர்மமும் ★

★

என்னை நாஸ்தீகன் என்று சொல்லுகிறவர்கள் நாஸ்தீகன் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்லுகிறார்களோ அந்த அர்த்தத்தில் நான் நாஸ்தீகன்தான் என்பதை வலியுறுத்திச் சொல்லுகின்றேன். நாஸ்தீகத்திற்குப் பயந்தவனானால் ஒரு காரியமும் செய்ய முடியாது. அதிலும், சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால் நாஸ்தீகத்தினால் தான் முடியும். நாஸ்தீகமென்பதே சமதர்மம் என்று பெயர். அதனால் ருஷியாவையும் நாஸ்தீக ஆட்சி என்கிறார்கள். பௌத்தரையும் நாஸ்தீகம் என்றதற்குக் காரணம், அவர் சமதர்மக் கொள்கைப் பரப்ப முயற்சித்ததால்தான். நாஸ்தீகம் என்பது சமதர்மக் கொள்கை மாத்திரமல்ல, சீர்திருத்தம் அதாவது ஏதாவது ஒரு பழைய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால் அந்த மாற்றத்தையும், ஏன், எவ்விதச்சீர்திருத்தத்தையுமே நாஸ்தீகம் என்றுதான் வைதாபிரியர்கள் சொல்லித்திரிவார்கள். எங்கு எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ அங்கு எல்லாம் இருந்துதான் நாஸ்தீகம் முளைக்கின்றன. கிறிஸ்துவையும், மகமது நபியையும் கூட நாஸ்திகர்கள் என்று யூதர்கள் சொன்னதற்கும் அவர்களது சமதர்மமும், சீர்திருத்தமும்தான் காரணமாகும். துருக்கியில் பாட்சாவும், ஆப்கானியஸ்தான் அமீரும் நாஸ்தீகர்கள் என்று அழைக்கப்பட்டதற்கும் அவர்களது சீர்திருத்தந்தான் காரணம். ஏனென்றால் இப்போது வழக்கத்தில் இருக்கும் கொள்கைகளும், பழக்கங்களும் எல்லாம் கடவுள் செய்ததென்றும், கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளையென்றுமேதான் யதாப்பிரியர்கள் சொல்லுகின்றார்கள். ஆகவே நாம் இப்போது




எதெதை மாற்றவேண்டுமென்கின்றோமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாகவும் அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ, தனது தூதர்களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால் அவைகளைத் திருத்தவோ, அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறின அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததேயாகும்.

உதாரணமாக மக்களில் நான்கு ஜாதி கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொல்லப்படுகையில், மேற்படி ஜாதி ஒழிய வேண்டுமென்றால், அவன் கண்டிப்பாகக் கடவுளை மறுத்தோ அலட்சியம்செய்தோதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும், மதக்கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்களாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டது என்று சொல்லப்படுகையில், அம்மத வித்தியாசங்கள் ஒழிய வேண்டும் என்றும் மதக்கொள்கைகள் மாற்றப்பட வேண்டும் என்றும் சொல்லும் போது, அப்படிச் சொல்லுபவன் அந்தந்தக் கடவுள்களை, கடவுள்களால் அனுப்பப்பட்ட தெய்வீகத்தன்மை பொருந்தினவர்களை அலட்சியம் செய்தவனேயாகின்றான். அதனால்தான் கிருஸ்தவர் அல்லாதவர் அஞ்ஞானி என்றும், மகமதியரல்லாதவர் காபர் என்றும், இந்து அல்லாதவர் மிலேச்சர் என்றும் சொல்லப்படுகின்றது.

அன்றியும் கேவலம் புளுகும், ஆபாசமும் நிறைந்தபுராணங்களை மறுப்பதே இந்துமதக் கொள்கைப்படி நாஸ்தீகம் என்று சொல்லப்படும் போது ஜாதியையும், கர்மத்தையும் மறுப்பதை ஏன் நாஸ்தீகம் என்று சொல்லமாட்டார்கள்?

ஜாதி, உயர்வு தாழ்வு, செல்வம், தரித்திரம், எஜமான், அடிமை ஆகியவைகளுக்குக் கடவுளும், கர்மமும்தான் காரணம் என்று சொல்வதானால், பிறகு மக்களுக்கு விடுதலையும் முன்னேற்றமும் எங்கே

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இருக்கின்றது? கடவுளையும், கர்மத்தையும் ஒழித்தாலொழிய அதற்காக மனிதன் எப்படிப் பாடு படமுடியும்? மேடும் பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமே யாகும். மனிதனுக்கு முகத்தில், தலையில் மயிர் முளைப்பது கடவுள்செயலானால், க்ஷவரம்செய்து கொள்வது கடவுள் செயலுக்கு எதிராகவே செய்யும் அதாவது ஓரளவுக்கு நாஸ்தீகமான காரியமேயாகும். அதிலும் க்ஷவரம் செய்யச்செய்ய மறுபடியும் மறுபடியும் மயிர் முளைப்பதைப் பார்த்தும் மேலும் க்ஷவரம் செய்வது வடிகட்டின நாஸ்தீகமே யாகும். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதும் நாஸ்தீகமே யாகும். ஏனெனில் கடவுள் பார்த்து ஒருவனை அவனது "கர்மத்திற்காக" பட்டினி போட்டிருக்கும் போது நாம் அவனுக்குச் சோறு போடுவது கடவுளுக்கு விரோதமான காரியமேயாகும். அதாவது கடவுளை நம்பாத கடவுள் செயலை லட்சியம் செய்யாத தன்மையே யாகும். இப்படியே பார்த்துக்கொண்டு போனால் உலகத்தில் ஆஸ்திகன் ஒருவனும் இருக்க முடியாது. ஆதலால் நம்மைப் பொறுத்தவரை நாம் பல மாறுதல் ஏற்பட விரும்புவதால் அவை கடைசியாய் நாஸ்தீகமே யாகும். நாஸ்தீகமும் சாஸ்திர விரோதமும் தர்மத்திற்கு விரோதமும் செய்யாமல் யாரும் ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்ய முடியவே முடியாது.

நமது நாட்டினர்களே ஏழைகளை வஞ்சித்துக் கொள்ளை அடிக்கிறார்கள். பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக் கொள்வதால் தினமும் ஏய்த்துக் கொண்டே வருகின்றார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களை விழிக்கச்செய்து நீங்கள் ஏழைகளாய், தரித்திரர்களாய் இருப்பதற்குக் கடவுள் செயல் காரணமல்ல; உங்கள் முட்டாள் தனம்தான் காரணம், ஆதலால் நீங்கள் கடவுள் செயலை லட்சியம் செய்யாதீர்கள் என்று சொன்னால்தான், செல்வந்தர்களின் அக்கிரமங்களைப் பாமர மக்கள் அறியக்கூடும். அப்பொழுது கடவுள் செயலையும், அதிக மூடர்களிடம் கடவுளையும் மறுத்துத்தான் ஆகவேண்டும். இந்த நாட்டில் ஒருபுறம் ஏழைகள் பட்டினி கிடக்க, ஒருபுறம் சிலர் கோடீஸ்வரராய் கொண்டு தலை கொழுத்து டம்பாச்சாரியாய்த் திரிவது கடவுள் செயல் என்றால், இந்த நாட்டுச் செல்வத்தை வெளியான் சுரண்டிக் கொண்டு போவதும், அவன் இங்கு ஆடம்பரமாய் வாழ்வதும் கடவுள்செயல் என்றுதான் சொல்லவேண்டும். ஆகையால் கடவுள் செயல்கள் ஒரு காரியத்திற்கும் மற்றொரு காரியத்திற்கும் மாறுபடுவது போலவே தர்மமும், நீதியும்கூட ஒரு சமயத்திற்கும் மற்றொரு சமயத்திற்கும் மாறுபட வேண்டியதே யாகும். ஒரு காலத்தில் அரசர்கள் விஷ்ணு அம்சமாய் இருந்தார்கள். ஆனால் இப்போது அரசர்கள் கொள்ளைக்காரர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அதுபோலவே செல்வவான்கள் இந்தக்காலத்தில் "லக்ஷ்மிபுத்திரர்களாய் இருக்கிறார்கள்". இன்னொரு காலத்தில் அவர்கள் பெருத்த வஞ்சகப் பகற்கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்பட்டு, பலாத்காரத்தில் அவர்களிடமிருக்கும் செல்வங்களைப் பிடுங்கிக் கொள்ளப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். உதாரணமாக மனுதர்ம சாஸ்திரத்தில் "சூத்திரன் பொருள் சேர்த்து வைத்திருந்தால், பார்ப்பனன் அதை பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாம்" என்று இருக்கிறதை இன்னும் பார்க்கின்றோம். கொஞ்சகாலத்திற்கு முன் இது அமுலிலும் இருந்திருக்கிறதாம். இனி கொஞ்சநாள் போனால் பார்ப்பான் பணம் வைத்திருந்தால் பார்ப்பனரல்லாதார் பலாத்காரமாய் பிடிங்கிக்கொள்ளலாம் என்று தர்மம் ஏற்பட்டாலும் ஏற்படும். அப்படி ஏற்படுவது முன்னைய வழக்கத்திற்கு விரோதம் என்பதாக யாரும் சொல்ல முடியாது. காலம் போகப்போக நேரில் உழுது பயிர்செய்ய முடியாதவனுக்கு பூமி இருக்கவேண்டியதில்லை என்றும், அப்படியிருந்தாலும் சர்க்காருக்கு வரி கொடுப்பதுபோல் ஒரு சிறு அளவுதான் பாத்திய முண்டேயொழிய, இப்போது இருப்பது போல் உழுகின்றவன் தனவயிற்றுக்கு மாத்திரம் எடுத்துக் கொண்டு, ஏன் சில சமயங்களில் அதற்கும் போதாமலும் இருக்க, பூமிக் குடையவனுக்கு பெரும்பாகம் கொடுப்பது என்கின்ற வழக்கம் அடிபட்டாலும் அடிபடலாம். அதுபோலவே இன்று கோவில் கட்டுவது தர்மமாக இருக்கின்றது. ஆனால் பிற்காலத்தில் கோவிலை இடித்து விக்கிரகங்களை உடைத்து பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும் ஏற்படுத்துவது தர்மம் என்றானாலும் ஆகலாம். இதுபோலவே அநேக விஷயங்களில் இன்றைய தர்மம், நாளைக்கு அதர்மமாகி, தலைகீழாக மாறக்கூடும். அப்பேர்ப்பட்ட நிலைமைவரும் போது இன்றைய நிலைமை எல்லாம் கடவுள் கட்டளை என்றால் அதை மாற்ற முற்படுகின்றவன் கடவுள் கட்டளையை மறுக்க ஏன் கடவுளையே மறுக்க துணிந்தாகவேண்டும். கடவுளை மறுக்கத்துணிந்தவனே தர்மத்தின் பேரால் உள்ள இன்றையக் கொடுமைகளை ஒழிக்க முடியும். அப்படிக்கில்லாமல் கடவுளுக்கும் மோட்சத்திற்கும் பயந்து கொண்டிருப்பவனால் ஒரு காரியமுமே செய்யமுடியாது என்பதுறுதி.

ஏனெனில் அரசியல், சமூக இயல், பொருளாதார இயல் ஆகியவைகளில் உள்ள இன்றைய கொடுமையான நிலையும், முட்டாள்தனமான நிலையும், அயோக்கியத்தனமான நிலையும் எல்லாம் கடவுள் கட்டளையாலும், மோட்ச சாதனங்களாலும், சாஸ்திரதர்மங்களாலுமே ஏற்பட்டவைகளாகும். ஆகையால்தான் அவ்விஷயங்களில் நான் அவ்வளவு உறுதியாய் இருக்கிறேன்.


## கவனிக்க

புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புவோர், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. 3-ரூபாய்க்கு உட்பட்ட ஆர்டராயிருந்தால், ஆர்டருக்குரிய முழுத் தொகையையும் செலவுத் தொகையையும் முதலிலேயே அனுப்பிவிடவேண்டும். 3-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டராயிருந்தால், நாலில் ஒரு பங்காவது முன்னால் அனுப்பிவிட வேண்டும். இப்படி முன்பணம் அனுப்பாத ஆர்டர்கள் நிச்சயமாகக் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், குடி அரசு, ஈரோடு

20 ஆண்டுகளுக்குமுன் பெரியார்.

# மெட்டிரியலிஸம்.

★

## —மோட்சமும் நரகமும்—

★

மனிதன் உடல், உயிர், மாயை எனும் முப்பொருளாக ஆக்கப்பட்டிருக்கிறான் என்று சைவர்களும், பிரம்மமே மாயா சம்பந்தப்பட்டு இவ்வுலகில் ஜீவர்களாய்த் தோன்றியிருக்கிறது என்று ஸ்மார்த்தர்களும், 'ஆன்மா' என்றொரு பொருளை இறைவன் சிருஷ்டித்து மனித உடலுக்குள் புகுத்தியிருக்கிறான் எனச் சில மதங்களும் இவ்வாறு ஒன்றிற்கொன்று முரணாக, நாம் முன் அதிகாரங்களில் விளக்கிக் காட்டியபடி கூறி வருகின்றன. ஆனால் எல்லா மதங்களும் 'ஆன்மா' செய்த நன்மை தீமைக்குத் தகுந்தவாறு மோட்சமும் நரகமும் எய்துமென்பதை அபிப்பிராய பேதமின்றி ஒத்துக் கொள்கின்றன. ஆனால் மோட்சமும் நரகமும் எவ்வாறு இருக்கும் என்றால், ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகவே வர்ணிக்கின்றது. எந்த நாட்டான் நரகத்தைப் பற்றி எழுதியிருந்தாலும், தத்தம் நாட்டிலுள்ள கொடிய பிராணிகளும், பயங்கர உருவங்களும், கஷ்டமான அனுபவங்களும் தான் நரகத்திலேயிருப்பதாகவும், அவ்வாறே மோட்சத்திலும் தத்தம் நாட்டிலுள்ள உயர்ந்த பிராணிகளும், மரஞ் செடி, கொடி, பழவர்க்கம், உணவு, பெண்கள் முதலிய போகபோக்கியங்களுமிருப்பதாகவே எழுதி வைத்திருக்கின்றான்.

நரகமும் மோட்சமும் பணம் பறிப்பதற்குப் புரோகிதர்களால் கட்டப்பட்ட ஓர் கற்பனை உலகம் என்றே யாம் கருதுகின்றோம். சிறு பிள்ளைகளை அய்ந்து கண்ணன் வருகிறான், பூச்சாண்டி வருகிறான், அழாதே! அப்படிச் செய்யாதே! இப்படி நடவாதே! என்று ஏமாற்றுவது போலவே, மனிதர்களை நரகத்தைக் காட்டிப் புரோகிதர்கள் மிரட்டுவதும், சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய், சாக்லெட் முதலியவைகளைக் காட்டி தத்தம் வழிக்குத் திருப்புவதுபோல மக்களிடம் மோட்சத்தைக் காட்டி பணம் பறித்து வருகிறார்கள். மேலும் முதலாளிகள் தொழிலாளிகளையும், அரசன் குடிகளையும் விழித்து, ஜாக்கிரதை! நீ எஜமானத் துரோகம், ராஜத் துரோகம் செய்தால் என்றும் மீளாத கொடுநரகிலே வீழ்ந்து என்றும் துன்புறுவாய் என்று மிரட்டி, அவர்களுக்குத் தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் உதிக்காமலே ஏமாற்றி விடுவதற்குத்தக்க பேராயுதமாய் நரகம் விளங்கி வருகிறது.

பொதுவாக எம்மதத்தை உற்று நோக்கினாலும் மோட்சத்தை, பணம், சாம்பல் (விபூதி) சிலுவை, குருபக்தி, பிரார்த்தனை முதலியவைகளினால் எளிதில் பெற வழி காணலாம்.

மக்களுலகில் வறுமையும் ஏமாற்றும் அக்கிரமங்களும் இந்த மோட்ச—நரகப் பைத்தியத்தினாலும், பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தாலும்பெருகி வளர்ந்து வருகிறது என்பது மறுக்க முடியா உண்மையாகும்.

மோட்சமும் சுவர்க்கமும் கள்ளுச் சாராயக் கடைகளைவிட, தாசி வேசிகள் வீடுகளைவிட மோசமானது என்பதை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். மோட்ச நரகம் என்பது எப்படித் திருடர்கள் பிரயாணிகளை வழிப்பறி செய்வதற்குத் தனிவழியில் ஆள் அடையாளம் தெரியாமல் வேஷம் போட்டுக் கொண்டு வந்து வழி மறித்து மண்டையை உடைக்க, தடிக் கம்பையும் ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச் செல்லுகிறார்களோ, அதுபோலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழிமறித்துப் பொருள் பறித்துப் போகச்செய்து கொண்ட ஆயுதங்களேயாகும். ஆகையால் அதை மனிதன் முதலில் மறந்தாகவேண்டும். இந்த உலக வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் மக்களுக்கு உதவி செய்வதையும் தனது அளவுக்கும் தேவைக்கும் மேற்பட்டதை அடைய ஆசைப்படாமலிருக்க வேண்டியதையே மோட்சம் என்று மக்கள் கருதவேண்டும். இந்தப்படி அளவுக்கும் தேவைக்கும் மேல், மக்களை அடையச்செய்யாமல் பார்த்துக்கொள்வதையே மக்களை மோட்சத்திற்கு அனுப்பும் வேலையென்று நாம் கருதவேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படித் தனது தேவைக்கும், அளவுக்கும், தகுதிக்கும்மேல் அடைய ஆசைப்படுகின்றானோ, அதற்கு ஆதரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவர்களது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசைகாட்டி இங்கு தட்டிப் பிடுங்கிக்கொள்ளுகிறார்கள். மூடர்களும் பேராசைக்காரர்களும்தான் மோட்சத்தை விரும்புவதை நாம் பல உதாரணங்களால் காணலாம். மோட்சத்தையும் தேவலோகத்தையும்பற்றிப் பாமர மக்களுக்குச் சொல்லப்படும் கருத்துக்களைச் சற்று கவனித்துப்பாருங்கள். மனிதனுக்கு எதெதில் சாதாரணமாய் ஆசை வரக்கூடுமோ அதையேதான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.

அதாவது இங்குள்ள மனிதனுக்குப் பொருள் வேண்டும், பெண் வேண்டும், தேவையானதெல்லாம் நினைத்தமாத்திரத்தில் கிடைக்க வேண்டும், நல்ல வாலிபப் பருவம் வேண்டும், சதா இடைவிடாத போக்கியம் பெறவேண்டும், சாகாமலிருக்கவேண்டும். இந்த விஷயங்கள் மனிதனுக்குச் சாகும்வரையிலும், செத்தபிறகும் அனுபவிக்கக் கூடியதாய் ஆசைப்படக்கூடியதாய்

இருக்கிறது என்பது யாரும் அறிந்ததாகும்.

ஆகவே இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இருப்பதாகவும் அதை அடையக்கூடும் என்றும் ஆசை உண்டாகும்படி, அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும், ரத்னங்களும் நிறைந்து கிடக்குமென்றும், உலகமே பொன்னுலகமென்றும், அங்கு அரம்பை ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகைகள் என்பவர்கள் என்றைக்கும் வாலிபமாய் நம் பக்கத்தில் இருந்துகொண்டு நமக்கு சதா போகம் கொடுத்துக்கொண்டிருப்பார்களென்றும், காமதேனு கற்பக விருட்சங்கள் நமக்கு எது தேவையோ அதை உடனேயே கொண்டு வந்து கொடுக்குமென்றும், நரை, திரை, மூப்பில்லையென்றும், நாம் சாகாமல் சிரஞ்சீவியாய் இருப்போமென்றும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டதால், அவைகளை மனிதன் நித்தியமாய் நம்பி இந்த உலகத்தையும், இங்குள்ள போக போக்கியங்களையும் அநித்தியமாய் எண்ணி, கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள்களையெல்லாம் இந்த மோட்சத்திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது, இதற்காகவென்று பலவிதமான அக்கிரமமான வழிகளிலும் மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும் பொருள் பறித்தும்கூட இதற்காக செலவு செய்யவேண்டியிருக்கின்றது. உதாரணமாக ஏழை மக்கள் கஞ்சிக்கு அலையும் போது குடம் குடமாய்ப் பால் குடங்களைத் தினமும் கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாற வைப்பதின் கருத்து என்ன என்று பாருங்கள். குடியிருக்க நிழல் இல்லாமல் மக்கள் திரியும்போது மலைகளையும், பாறைகளையும் உடைத்துக் கோட்டைகள்போல்—சந்திரகாந்த மண்டபங்கள்போல், மக்கள் கோவில்கள் கட்டுவதின் கருத்து என்னவென்று பாருங்கள். எவ்விதத் தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும், தொழிலில்லாமலும் மக்கள் வயிறுவளர்க்கக் கப்பலேறி வேற்று நாட்டிற்குக் கூலிகளாய்ப்போய் சொத்துப் போச்தென்று மாண்டு மடிந்து கொண்டிருக்கும்போது, பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும், அவற்றிற்குப்பத்து லக்ஷம், ஒரு கோடி பத்துக்கோடிக் கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும், சொத்துக்களும் சேர்த்து வைப்பதின் கருத்தென்னவென்று பாருங்கள். நாளுக்குநாள் வாழ்க்கை துன்பகரமாய்மாறி, ஏழைகள் மலிந்து வரும்போது ஆயிரக்கணக்காய்—ஏன்—லட்சக்கணக்காய் ரூபாய் செலவு செய்து, கும்பாபிஷேகங்கள் செய்வதின் கருத்து என்னவென்று யோசித்துப்பாருங்கள். பூமியை உழுது கஷ்டப்பட்டு பயிர் செய்யும் குடியானவர்கள் அரை வயிற்றுக்குக்கூட போதுமான ஆகாரமில்லாமல் கஷ்டப்படும்போது, குழவிக் கல்லுக்கும், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, முப்பது மூட்டை போன்ற அரிசிகள் போட்டுப் பொங்கி நைவேத்தியம் செய்து பாடுபடாத சோம்பேறிகளுக்குக் குடும்பத்துடன் போட்டுக்கொண்டிருக்கும் கருத்து என்ன என்று எண்ணிப்பாருங்கள். மக்களில் நூற்றுக்கு 10-பேர்களுக்குக்கூட அதாவது சராசரி படிப்பு-எழுத்து வாசனைகூட இல்லாமல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை முதலியவைகளுக்கும், கல்லுகள், பொம்மைகள் பின்னால் நின்றுகொண்டு ஆயிரத்திற்கு ஒருவருக்குக் கூடப் புரியாத வேதபாராயணம் முதலியவைகள் செய்யப்படுவதற்கும் லட்சக்கணக்காய் செலவு செய்வதையும், செய்யப்படுவதின் நோக்கும் என்ன என்பதையும் யோசித்துப் பாருங்கள். இப்படியாக நமது நாட்டில், இதுபோலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றது என்பதை நோக்கினால், மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்தியாவது, அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலாவது சிறிதும் லட்சியம் செய்யாது—நாம் மோட்சத்திற்குப் போகவேண்டும்; நாம் பிரபுவாய் இருக்கவேண்டும்; லட்சுமி புத்திரராய்—ராஜாவாய்—நிரந்தர செல்வனாய்—சிரஞ்சீவியாய் இருக்கவேண்டும் என்கிற பேராசையல்லாமல், வேறு தத்துவம் அதில் என்ன இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள். இந்தமாதிரி மோட்சம் கற்பிக்கப்பட்டு அதை அடைவதே மனிதனின் முக்கிய லட்சியம் என்று போதிக்கப்பட்டிருக்கின்ற பேராசையுள்ள ஜனங்கள் மலிந்திருக்கும் இந்த நாட்டில், இந்த உணர்ச்சியை அழிக்காமல் என்ன காரியம் நம்மால் செய்ய முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆதலால் தான் முதலில் மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்படவேண்டியது அவசியம் என்று கருதுகிறோம்.

சகோதரர்களே! இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்படவேண்டியதைப்போலவே நரக உணர்ச்சியும் அழிக்கப்படவேண்டும். மோட்ச உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அதுபோலவே நரக உணர்ச்சியும், அடிமைத்தனத்தினுடையவும்; பயங்காளித் தனத்தினுடையவும், பிரதிபிம்பமாகும். நரகத்திற்கு பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகிறான்; தைரியமில்லாத கோழையாயிருக்கின்றான். இவைகளையெல்லாம் விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால், சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகரவேண்டுமானால் எல்லாவற்றையும்விட மனிதனுக்கு விதி, கர்ம பலன் என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழிய வேண்டும். விதி, கர்மபலன் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கவில்லையானால், இன்றையத் தினம் இந்நாடு அநேக விஷயங்களில் ருஷியர்களுக்கு—ஏன்—இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து அநேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும், சம இன்பத்தையும், இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து சர்வ சுதந்தரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். ஆகையால் இந்த கர்ம பலனின் உணர்ச்சி, மோட்ச நரக நம்பிக்கைகள் மனிதத் தன்மைக்கு மிகவும் கேடான எதிரி என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நான் மேலே காட்டிய இந்தக் காரணங்கள்தான் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்த நாடு சுயமரியாதை பெற்றுவிடும்; சுதந்தரம் பெற்று

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

[உரிமை ஆசிரியருக்கே]

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

பரத்தையர்.

பரத்தைமை—அயன்மை. பரத்தையர்—அயலார். களவொழுக்கம் ஒழுகி மணந்துகொண்டு இல்லறம் நடத்தும் தலைவியல்லாத பிற மகளிர். இவர் 1. காமக்கிழத்தியர், 2. காதல் பரத்தையர், 3. சேரிப் பரத்தையர் என மூன்று வகைப்படுவர். களவொழுக்கம் ஒழுகி மணந்துகொள்ளாதவர், இன்று கிருத்துவ சமயக் கன்னிப் பெண்கள் இருப்பதுபோல், பண்டு மணம் செய்துகொள்ளாது சில பெண்கள் இருந்துவந்தனர். இவர்கள் பிறர்க்கு அடிமையின்றித் தன்னுரிமையோடு இருந்துவந்தனர். அவர்களே இம் மூவகையினரும்.

1. காமக்கிழத்தியர் தலைவனது செல்வ நிலைமையறிந்துவாழ்க்கை நடத்தும் குணமுடையராகித் தலைவன்மீது அன்பு பூண்டு இல்லறம் நடத்தும் அயல் மகளிர். இவர் மனைவியர் போன்றவரே. இன்றும் மணஞ் செய்துகொள்ளாது சில பெண்கள் தமக்கு விருப்பமானவரோடிருந்து மனைவியர் போலவே இல்லறம் நடத்தி வருதல் இதனை வலியுறுத்தும். தக்க பருவத்தே காதலுற்று முறையாகக் களவொழுக்கம் ஒழுகி மணந்து கொள்ளாமல், மணஞ்செய்துகொள்ளாமல் காமத்திற்காக மனைவி போல் இருந்து வருபவர்.

2. காதற்பரத்தையர்: இவர் தலைவனிடம் அன்பு கொண்டு இன்பம் துய்ப்பவர். காமக்கிழத்தியர் போல் தலைவனோடிருந்து இல்லறம் நடத்தாமல் தனி வாழ்க்கை வாழ்பவர். இன்று ஏதாவது வேலையிலிருக்கும் பெண்கள் தமக்குப் பிடித்தவரை வரப்போக வைத்துக்கொண்டிருப்பது போன்றது இது. இவர் தலைவரை நம்பியே வாழாமல் தன்னுரிமையோடு வாழ்பவர்.

3. சேரிப்பரத்தையர்: இவர் தமக்கென ஒருவரை வைத்துக் கொள்ளாது விருப்பமுள்ளபோது விரும்பியவரைக் கூடி வாழ்பவர். இவர் தலைவன் மீது அன்பின்றித் தலைவன் கொடுக்கும் பொருள் மீது அன்புடையவர். இவர்தான் திருவள்ளுவர் கூறும் 'வரைவின் மகளிர்' ஆவர். இவர் பெருஞ் செல்வர்களால் உண்டாக்கப்பட்டு, நாளடைவில்தாமாகவே உண்டாகி, ஒரு தனிக்கூட்டம் ஆனவர் போலும். ஆண்களிற் சிலரும் முறையாக மணஞ் செய்து கொள்ளாது அம்மூவகை மகளிர் போல் இருந்து வருதல் பண்டு தொட்டு இன்றளவும் உண்டு. உயிரினும் ஒழுக்கமே பெரிதெனக் கொண்ட நம் முன்னையோர்க்கு இஃதொரு பேரிழுக்கேயாகும். ஒரு சில அடங்காமாறிகளால் உண்டான இத்தீமை தமிழினத்திற்கே ஒரு களங்கமாக விளங்கி வருகிறது. இது பண்டு ஆண்பெண் இருவரிடத்தும் ஒப்பாகவே நடந்து வந்து, வரவர ஆண்கள் தலைவர்களாகப் பெண்கள் அடிமைகளாயினர். பின்னர் அது, ஆடவர் தம் காதலைக் கழித்துக் கொள்ளும் கருவியாக ஒரு வகுப்பை உண்டாக்கி விட்டது.

ஊடலைச் சிறப்பிக்கவே ஆசிரியர் பரத்தைமை கூறினார்; தலைவனது தலைமைச் சிறப்பால் தலைவி அவ்வாறு எண்ணுவாள் எனில், இல்லாத ஒன்றை உண்டென எண்ணுவது பொய்யின் பாற்பட்டு, தலைவியின் கற்பொழுக்கத்திற்கே மாறுபட்ட செயலாகி விடும். காமக்கிழத்தியர்க்குத் தனியாகக் கூற்றுக் கூறியிருப்பதாலும் (கற்பியல் 10) "புதுவோர் சாயற் ககன்ற கிழவனை" (கற் 6) "நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளிய வழியும்" (கற் 6) "பரத்தை மறுத்தல் வேண்டியும்" (கற் 17) "பரத்தையிற் பிரிந்த காலை" (கற் 46) "பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே" (பொருள் 30) "தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்" (பொருள் 41) என்பனவற்றாலும், "பாணன், கூத்தன், விறலி, பரத்தை" (செய் 190) எனக் கற்பின் கூற்றிற்குரியராகக் கூறியிருப்பதாலும் இவையெல்லாம் பொய் யெனப்பட்டு, பாயிரத்தில் "வழக்கும் செய்யுளு மாயிரு முதலின்" என்பதற்குமாறாய்த்,தொல்காப்பியம் பழந்தமிழர் ஒழுக்கங் கூறும் நூல் அன்றெனப் படுவதோடு, வள்ளுவர் வரைவின் மகளிர் என ஓர் அதிகாரங்கூறியிருப்பதற்கு இலக்கணமும் இன்றாய் முடியும். இப்பரத்தைமைச் செயல் தமிழின ஒளிமணியில் படிந்த ஒரு சிறு மாசேயாகும். இது களையத்தக்கது.

6. மக்கள்.

நன் முன்னையோர் அகவொழுக்கத்திற்கு முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் வகுத்தமை போலவே, இன்ன நிலத்திற்குரியார் இன்னார் எனவும், இன்ன ஒழுக்கமுடையோர் இன்னார் எனவும் அவ்வகை நிலத்துக்கும், அவ்வகை ஒழுக்கத்துக்கும் தனித் தனி மக்களும் வகுத்துள்ளனர். நிலத்துக்குரியோர் நிலமக்கள் எனவும், ஒழுக்கத்துக்குரியோர் தலைமக்கள் எனவும் பெயர் பெறுவர். முல்லை நில மக்கள் பெயர்: ஆண்-ஆயர், கோவலர், இடையர், பொதுவர். பெண்-ஆய்ச்சியர், கோவித்தியர், இடைச்சியர், பொதுவியர். தலைமக்கள் பெயர் ஆண்:-அண்ணல், தோன்றல் குறும்பொறைநாடன், பெண்—மனைவி, கிழத்தி. குறிஞ்சி நில மக்கள் பெயர். ஆண்-குறவர், வேட்டுவர்; பெண்—குறத்தியர்,

வேட்டுவிச்சியர். தலைமக்கள் ஆண்-வெற்பன், சிலம்பன், பொருப்பன்; பெண்-கொடிச்சி. மருதநில மக்கள் பெயர்: ஆண்-உழவர், களமர்; பெண்-உழத்தியர், களத்தியர். தலைமக்கள் பெயர்: ஆண்-மகிழ்நன், ஊரன்; பெண்-மனையாள். நெய்தனில மக்கள் பெயர்: ஆண்-நுளையர், பரதவர்; பெண்-நுளைச்சியர், பரத்தியர். தலைமக்கள் பெயர்: ஆண்-கொண்கன், துறைவன், சேர்ப்பன்; பெண்-பரத்தி. பாலை நிலமக்கள் பெயர். ஆண்—எயினர், மறவர்; பெண்-எயிற்றியர், மறத்தியர். தலைமக்கள் பெயர்: ஆண்-மீளி, விடலை, காளை; பெண்-கன்னி.

அகவொழுக்கம் எல்லா மக்களுக்கும் பொதுவாதலால், நிலப்பெயரால் பாடாது, வெற்பன், அண்ணல் என்னும் உரிப்பெயரால் பாடுவது செய்யுள் வழக்குக்கு மாறாகும். ஆயர், வேட்டுவர் முதலிய நிலப் பெயர்களும் ஒருவரைக் குறியாமல், ஒரு நிலத்தில் வாழும் மக்கட்கெல்லாம் பொதுப் பெயராய் உள்ளதால் அப்பெயர் கொண்டும் சிறுபான்மை பாடுதல் குற்றமின்று.

அடியோர், வினைவலர்.

அகத்திணையியல் 23-வது சூத்திரத்தில், கைக்கிளை, பெருந்திணைக்கண் அடியோர், வினைவலர் என்போரையும் தலைமக்களாகக் கொண்டு பாடலாம் என்கிறார் ஆசிரியர். அடியோர், வினைவலர் என்னும் பெயர்களைக் கொண்டு ஆசிரியர் காலத்தே தமிழ் நாட்டில் இருந்து வந்தது. 'அடியோர்' என்பது விற்றுக் கோள்ளற்குரிய அடிமைகளையே குறிக்கும் என்று பொருள்கூறி தமிழர் பண்பாட்டை அறியாது செய்து விட்டனர். 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்ற தமிழரிடை அடிமைகள், அதுவும் விற்றுக் கொள்ளும் அடிமைகள் எப்படி இருந்திருக்கமுடியும்? அப்படியிருந்திருக்கின் 'பிறப்பொக்கும்' என்றது பொய்யுரையா? 'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பொவ்வா' என்றபடி தொழில் பற்றியதே 'அடியோர், வினைவலர்' என்னும் பிரிவு.

அடியோர் தமக்கென்று நிலையான பொருளோ, தொழிலோ இன்றிச் செல்வரிடம் இருந்து, அங்கேயே உண்டுடுத்தோ, அல்லது நாட்கூலி பெற்றோ அச்செல்வர் தொழிலுக்கு அடிப்படையாய் இருப்பவர். கிளைகளைத் தாங்கும் அடிமரம்போல் செல்வர் தொழில்களை முடிப்பவர். சைவம், வைணவம் முதலிய சமயங்களைப் பரப்பினவருக்கு 'அடியோர், அடியார், அடிகள்' எனப் பெயர் வழங்குதல் அறிக. இன்னும் செல்வர்களிடம் ஆண்களும், பெண்களும் குற்றேவல் செய்து வருதல் காண்க. குறு+ஏவல்—குற்றேவல். தொடர்ச்சியின்றி அடிக்கடி ஏவியதைச் செய்தல்.

வினைவலர்: ஆண்டுக் கூலிகளாய்ச் செல்வரிடம் அமர்ந்து தொழில் செய்வாரும், தந்தலைமையின்றிப் பெற்றோர் முதலிய சுற்றத்தார் ஏவியதைச் செய்வோரும் ஆவர். இவர் அடிக்கடி பிறர் ஏவாமல் தொடர்ந்து தொழில் செய்வோராவர். இன்றும் நாட்டுப்புறங்களில் ஆண் மக்களும், பெண்மக்களும் (பருவமடைந்தும்) ஆடுமாடுகள் மேய்த்தும், பண்ணையில் வேலை செய்தும் வருதலை அறிக. ஆண்டுக் கூலிகள் பெரும்பாலும் ஆண்களே.

ஏழைப் பாட்டாளி மக்கள் ஆண்டுக் கூலிகளாகவும், ஆடுமாடு மேய்த்தல் முதலிய தொழில்களை என்றும் செய்பவராகவும் இருப்பதால், ஒத்த அன்பாகிய அய்ந்திணை ஒழுக்கத்தைத் தொடர்ந்து நடத்தி, முடிவில் மணவினை முடித்துக் கற்பினும் ஊடல், உணர்தல் முதலியவற்றிற்கேற்ப ஒழுகுதல் கூடாமையால் அடியோர், வினைவலர்—கைக்கிளை, பெருந்திணையிடத்தன்றி அய்ந்திணைத் தலைவராகக் கொண்டு செய்யுள் செய்யப் பெறா என்பதாம்.

இது, நாடக வழக்குப் பற்றிய பிரிவேயன்றி வருண வேற்றுமையன்று. அடியோரும், வினைவலரும் செல்வராதலும், தலைமை தாங்குதலும் கூடும். அப்போது அடியோரும், வினைவலரும் அய்ந்திணைத் தலைவராகப் பாடப் பெறுவர். எல்லாச் சிறப்புமுடையோரைத் தலைவராக்கிப் பாடுதலே செய்யுள் வழக்கென்பதையும், உயர் பொருளைக் கூறி அதையே மற்றவர் (பின்னவர்) பின்பற்றி நடக்க வேண்டும் என்றே சான்றோர் செய்யுள் செய்தலையும் அறிக. கைக்கிளை, பெருந்திணை யொழுக்கங்கள் தகாதனவாய் விலக்குக வென்பதே ஆசிரியர் கருத்தாகலான், ஒரு சில வேளை இவ்வொழுக்கங்கள் ஏழை மக்கள்பால் நடக்கினும் அதனால் குற்றமில்லை என்பதேயாகும்.

நாற்பால்:

பாலையொழுக்கமாகிய தூது முதலிய பிரிவுகள், அகத்திணைக்குப் பயன்பட்டுப் புறத்திணைக்கண் நிகழ்வதாகலின், அப் புறத்திணைக்கே சிறப்புடையாராகக் கூறப்படும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பாலரும் அகத்திணைத் தலை மக்களாகக் கொண்டும் செய்யுள் செய்யப்பெறுவர். முல்லை முதலிய அய்ந்நில மக்களிற் பெரும்பாலர் முன்பு, "உழுவார் உலகத் தார்க்காணி" (குறள் 1032) "உழந்தும் உழவே தலை" (குறள் 1031) "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" (நல்வழி) என உழவுத் தொழிலே செய்து வந்தனர். நெய்தல் நில மக்களும் உப்பாகிய உணவுப் பொருள் விளைவித்து வந்தனர். சிலர் அவ்வுழவுக்கு வேண்டிய கைத்தொழில்களும், சிலர் வாழ்க்கைக்கு வேண்டிய கைத்தொழில்களும், சில்ர் வெளுத்தல் முதலிய குடித்தொழில்களும் செய்து வந்தனர். உணவுப் பொருள்களையும், கைத்தொழிற் பொருள்களையும் உள்ள இடங்களில் கொண்டு வேண்டிய இடங்களுக்குக் கொடுத்தும், பிற நாடுகட்கனுப்பிப் பொருளீட்டியும் வந்தனர். மேற்கண்ட செயல்கள் இடையூறின்றி நடைபெறவும், ஒற்றுமை, அமைதி முதலியன உண்டாகவும், மக்கள் அச்சமின்றி வாழவும் உடல் வலிமிக்க சிலர் காத்து வந்தனர். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பொதுநல முதலியன ஒருங்கமைந்த பெரியோர்கள், உலகியல், அரசியல் முதலிய நடைமுறைகளைக் கற்பித்து மக்களை நன்னெறிக்கண் நிறுத்தி வந்தனர்.

# அறியாமைக் கூடத்துக்குத் திறப்புவிழா?

★

“மகரிஷி ரமணர் பால வயதில் ‘தபஸ்’ செய்து ஞானசித்தி பெற்ற ‘புண்ய ஸ்தலமான’ திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் ஆயிரக்கால் மண்டபத்தின் கீழுள்ள பாதாளலிங்கக் குகையை இந்தியக் கவர்னர் ஜனரல் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் திறந்தவுடனே, உள்ளே ஓர் பேரொளி-பெருஞ் ஜோதி—தோன்றியது. அவ்வொளியினூடே ஒரு கிண்ணம் போன்ற பாத்திரம் காற்றில் மிதந்து வந்து கவர்னர் ஜனரல் கைகளில் தங்கியது. அது ஓர் அமுத சுரபி. கவர்னர் அவ்வமுத சுரபியை ஏந்தி வெளியே குழுமியிருந்த ஏராளமான தொழு நோயாளர்கள், கண்ணிழந்தோர், ஏழைகள் முதலானோர்க்கு, எடுக்க எடுக்க மாளாத தேவாமிர்தத்தை வாரி வாரி வழங்கினார். நோயாளிகள் நோய் நீங்கப் பெற்றனர். குருடர்கள் விழி பெற்றனர். ஏழைகள் பசியா நிலை அடைந்தனர். மகான் ரமணரின் தபோ மகிமையே மகிமை! எனமக்கள் வாழ்த்திச் சென்றனர்.

இதென்ன எந்த ரகப் புளுகைச் சேர்ந்தது என்று சீர்திருத்தக்காரர்கள் நகைப்பர். மதவாதிகள் அப்படியா இருக்கலாம், ஆனால் எந்தப் பத்திரிகையிலும் அம்மாதிரி செய்தி வரவில்லையே என்று சற்று சந்தேகத்தோடு நம்பிக்கை கொள்வர். இன்னும் சிலர் இது கனவில் நடந்ததா? அல்லது களித்துக் குடும்பிய பித்தன் எவனாவது உளறியதா? என்றும் கேட்கலாம். என் மீது தப்பில்லை. நானென்ன செய்வது? பழைய புராணங்களிலெல்லாம் மகரிஷி, முனிவர், சித்தர்கள் பற்பல விசித்திரங்களையெல்லாம் சாதித்திருப்பதாகப் படித்துவிட்டு, மேலே தீட்டியவாறு நடக்கும் என்று நான் நம்பியதில் தவறென்ன?

மேலும், நான் நம்பியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. என்ன? ஒரு மாநிலத்தின் ஆட்சித் தலைவர், பாதாள லிங்கக் குகையில் மகத்துவமில்லாமலா அதைத் திறக்க ஒப்புக் கொண்டிருப்பார் என்பதே ஆகும்அது. சாதாரணக் குகையா அது. உலகத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் மக்களது ஆத்மார்த்திகத் தாகவிடாய் தீர்க்கவல்ல ஞானி ரமணர் தவசக்தி பெற்ற இடமல்லவா? நிச்சயம் ஏதாவது ஞானப் புதையல் பேரின்ப வாழ்வுக்கு வழி, அதனைக் கொண்டு மக்களை உய்விக்கும் சாதனம் ஏதாவது கிடைக்கும் என்று உறுதியாக இருந்தேன். அந்தோ! ஏமாந்தேன். 14ந்தேதியன்று காலை 5-மணிக்கே விழித்து முதல் வேலையாக ஒரு பத்திரிகையை வாங்கிப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். மேலே கண்டவாறு ஓர் அற்புத நிகழ்ச்சியைப் பற்றிய செய்தியை என் கண்கள் துழாவின. எதிர்பார்த்தது இல்லாது கண்டு ஏமாளியானேன்.

குகையைத் திறந்தாராம். என்ன கண்டார்? காணாத கடவுளையா? அருட்பெருஞ் ஜோதியையா? அருகிலிருக்கும் அண்ணாமலையானையா? அல்ல. கண்டார் இருளை! காரிருளை!

ஆ, இதற்குத்தானா கனம் சி. ஆர். தமது அரிய பெரிய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு ஓடோடியும் வந்தார்? அவருக்கென்ன வேலை ஒன்றுமா இல்லை, ஏதோ பொழுது போக்காக வந்தார் என்று சொல்வதற்கு. அவரே சொல்லுகிறார், தமது நண்பர்களுடன் அளவளாவிப் பேசக்கூட தமக்குப் பதவி ஓய்வளிக்கவில்லை என்று. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே உள்ளவர் அரும்பாடுபட்டுக்கொண்டு வந்து ஏன் இந்த இருட்டு மண்டபத்துக்குத் திறப்புவிழாவாற்றினார் என்று என் மனது சிந்திக்கத் தொடங்கியது.

இந்த நாட்டிலே ஊரைச் சுரண்டிக் கொழுப்பவர்களுக்கும், கொலைக் குற்றவாளிகள் ஞானிகளாக அவதாரமெடுத்து நாட்டில் உலவுவதற்கும், பகலில் சாமியாராகவும் இரவில் காமியாராகவும் கூத்தடிக்கும் நயவஞ்சகர்களுக்கும், போலீஸ் புகாத இடமே இல்லை என்ற பழமொழிக்கு விதிவிலக்களிக்கும்படி போலீஸ் புகமுடியாமல் கட்டுக் கோப்புகளுடன் காட்டு ராஜா தர்பார் நடத்தி வரும் பங்களாக்களான ஆசிரமங்களுக்கும், அதில்நடக்கும் அக்கிரமங்களுக்கும், நல்ல செல்வாக்கு உண்டு மக்களிடையேயும், ஆட்சியாளர்களிடையேயும். இவை இங்கு இன்று நேற்றல்ல, தொன்று தொட்டு நடப்பதாகும்.

தென்னாட்டைப் பொறுத்தவரையில்ரமணரிஷி, அரவிந்தகோஷ், மெய்வழி ஆண்டகை போன்ற சிலர் ஆசிரமம் என்றும் மடம் என்றும் பெயர்களை வைத்துக் கொண்டு தாங்கள் ஏதோ ஆண்டவனைக் கண்டு பிடித்துவிட்டது போலவும் ஏனையோருக்கும் காண வழி காட்டுவதாகவும் காரியங்களைச் செய்து வருகின்றனர். இவர்களுக்குப் பக்கபலமாக பார்ப்பனப் பத்திரிகைகள் விளம்பரப் படுத்தி வருகின்றன.

மகான்களென்று பறைசாற்றப்படும் இவர்கள் இதுவரை மக்களுக்குச் சாதித்தவை என்ன என்று இவர்களைப் பற்றிய பிரசாரத்தில் மதிப்பைப் பறி கொடுத்தோர் சற்று சிந்திப்பார்களானால் உண்மை விளங்காமற் போகாது. இவர்களென்ன கடவுளுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்களா? கடவுளருள் பெற்றவர்களானால் இவர்கள் மனித சக்தியை மீறிய அற்புதங்களைச் செய்து காட்டலாமே! விளம்பரத்துக்காக அல்லாவிட்டாலும் மக்களுக்கு நலன் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தினாலாவது அவர்களது வேதனைகளை விலக்கலாமே!

தங்களது சாதனையைக் கொண்டு, ஞான சக்தியைப் பயன்படுத்தி, எலும்பைப் பெண்ணுருவாக்க வேண்டாம், எலும்புருக்கி நோயால் (T. B.) வாடி மடியும் கோடிக்கணக்கானவர்களுக்கு நோய் நீங்கி நல்வாழ்வு வாழ வசதி செய்யலாமே; முதலை உண்ட பாலனை அழைக்க வேண்டாம், பசி பட்டினிக்குப் பலியாகும் எண்ணற்ற பிச்சைக்காரர்களுக்கும், அநாதைகளுக்கும் அழைப்பு விடுக்கட்டுமே குறை தீர்க்கிறேனென்று; கொக்கை எரிக்க வேண்டாம், பொக்கை வாய்க் கிழமாக மாறாமல் இளமையோடிருக்கும் வரமளிக்கட்டுமே; செய்தார்களா இம்மாமுனிகள்! செய்யத்தான் முடியுமா இவர்களால்? ரமணரிஷி ‘தபஸ்’ செய்யும்பொழுது அவரது உடலில் பூச்சிகள் கடித்து இரத்தம் வெளிப்படுவதையே நீக்கிக்கொள்ளமுடியாத போழ்து, மற்றவர்கள் தங்கள் குறைகளுக்காக அவரை எதிர்பார்க்க முடியுமா? நியாயமா?

பாதாள லிங்கக் குகைத் திறப்புச் செய்திகள் தடபுடலாக வெளிவந்த அதே தினத்தாட்களிலே அட்லிசொல்லிய ஒரு செய்தியும் வெளிவந்தது. அதாவது உலகத்தில் எழுபது லட்சம் குஷ்டரோகிகள் உள்ளனரென்றும் அதில் 10,00,000-பேர் இந்தியாவில் இருக்கின்றனர் என்றும், குஷ்டநோயைப் போக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் அட்லி பேசியிருக்கிறார். மகான்களும் மகரிஷிகளும் வாழும் புண்ணிய பூமி

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

21—5—49 சனிக்கிழமை.

# புதிய மந்திரிசபையும் இந்தியும்.

—o—

இப்போது குமாரசாமி ராஜா அவர்களைப் பிரதமராகக் கொண்ட சென்னை மாகாணப் புதிய மந்திரிசபை, இந்த மாகாணத்தில், முக்கியமாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலுமாவது, பழைய மந்திரிசபையின் இந்திக் கொள்கையிலிருந்து, ஓரளவு மாறுதலைச் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டிருப்பதைக் கண்டு அந்த ஆசையைத் தமிழ் மக்கள் வரவேற்பார்கள். பழைய இந்திக் கொள்கையில் ஏதோ ஒரு தவறுதல்-திருத்தவேண்டிய பிழைபாடு இருக்கிறது என்பதை ஸ்தூலமாகவாவது உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது மாத்திரமல்ல, பிழைபாட்டைத் திருத்திக் கொள்வதற்கும் முயற்சிக்கிறோம் என்பதாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்களே, அந்த அளவுக்காவது வரவேற்கத்தானே வேண்டும்.

இந்தி நுழைப்பு—கட்டாயமாகத் தமிழ்படிக்கும் நூத்துக்குப் பத்துபேரும் படித்தாக வேண்டும் என்கிற ஏதேச்சாதிகார ஆணை—பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆச்சாரியாரால் பிறப்பிக்கப்பட்டு, அவர் மந்திரிசபை ஓடிப்போக வேண்டிய நிலை ஏற்பட்டவுடன், அந்தத் திட்டமும் இந்த நாட்டை விட்டு ஓடிப்போன திட்டமாகும். மேலும் நூற்றுக்கணக்கான தாய்மார்களும், ஆயிரக்கணக்கான கட்டிளங் காளையரும் பச்சிளங் குழந்தைகளோடும், நாட்டுமக்களின் தந்தையோடும் வெஞ்சிறை புகுந்து, கடுங்காவல் தண்டனையேற்று காரியுமிழ்ந்த திட்டமாகும்.

இந்தத் திட்டத்தைத்தான்—பத்து ஆண்டுகளுக்குமுன் வந்து தோல்வியுற்ற இந்தத்திட்டத்தைத் தான்—பிறகு வந்த பார்ப்பனப் பிரகாசம் அவர்களின் மந்திரிசபை திரும்பவும் புகுத்துவதற்குப் பின் வாங்கிய இந்தத் திட்டத்தைத் தான்—ஓமந்தூரார் மந்திரிசபையும் திணிப்பதற்கு முதலில் அஞ்சிய இந்தத் திட்டத்தைத்தான்-பிறகு மூக்கைச் சுரண்டிவிடப்பட்ட ஊமையர்கள் நிலையைப்போல், எப்படியும் இந்த நாட்டில் இந்தியைப் புகுத்தியே தீரவேண்டும் என்கிற மூர்க்கத்தனமான பிடிவாதத்தோடு, பார்ப்பனர்களின் தூண்டுதலுக்குக் கட்டுப்பட்டவர்களாய்-பனியாக்களின் நன்மதிப்புக்குக் குறுக்கு வழி என்று கருதியவர்களாய்—பார்ப்பனர்கள் செய்து தடைபட்டு நிற்பதைப் பார்ப்பனரல்லாதவர்களாகிய நாம் செய்து முடித்தோம் என்கிற வீண் பெருமை தங்களுக்கு ஏன் கிடைக்கக் கூடாது என்று ஆசைப்பட்டவர்களாய், ஓமந்தூரார் மந்திரி சபை சென்ற ஆண்டில் 2-வது உத்திரவு போட்டுக்கொண்டுவந்தது.

இப்படி, மற்றவர்களின் தூண்டுதலுக்காகக் கொண்டுவந்த இந்த உத்திரவை, செயல்படுத்தியே தீருவது என்கிற பிடிவாதக் குணத்தினால், தன் இனப் பெரியாரையும், தன் உடன் பிறப்பாளர்களையும், ஆண் என்றும், பெண் என்றும், கருக்கொண்ட தாய்மார்கள் என்றும் வித்தியாசம் பாராமல், சுடும் மணலில் கால்நடைத் தண்டனை கொடுத்தும், ஒரு வேளை இரண்டு வேளை முழுப் பட்டினி போட்டும், ஒரு வாரம்முதல் இரண்டு மாதம்வரை கடுங்காவல் தண்டனை கொடுத்தும், மேன்மை மிக்க நீதிபதி ஸ்தானத்திற்கே களங்கம் உண்டாகும் வகையில், மிக மிக மட்ட ரகமான முறையில் பேசச்செய்தும், சுருண்டு கீழே விழுந்தாலும் தூக்கி நிறுத்தித் தடிமாரி பொழிந்தும் நவீன மநுநீதிப் பரிபாலகராக ஓமந்தூரார் விளங்கினார்.

இவ்வளவு கடுமையான அவமானங்களையும், சித்திரவதைக் கொப்பான கொடுமைகளையும் ஏற்று அநுபவித்தாலும்கூட 'புசுத்துப் போய்விடும்' என்ற மந்திரிகளின் மனப்பாலைப் பொய்யாக்கி, ஒரு மயிரிழைகூடப் பலாத்காரமின்றி, அறவழியில் நின்று தமிழ் மக்கள் திராவிடக் கழகத்தின் ஆணைக்கடங்கிப் போரிட்டு வருகின்றார்கள். அப்போராட்டம் பள்ளிகளின் விடுமுறையையொட்டி இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வளவும் நமது புதிய மந்திரி சபையினர்—முக்கியமாகப் பிரதமர் அறிந்திருக்க வேண்டும்; அவருக்கு நினைப்பில் இருக்க வேண்டும்.

நிற்க, புதிய மந்திரி சபையினர், பழைய இந்திக் கொள்கையில், இப்போது எப்படி? எந்த அளவு? மாறுதல் செய்யப் போகிறார்கள் என்பது, அடுத்த மாத முதல்வாரத்தில்தான் திட்டவட்டமாகத் தெரியும் என்றாலும், இந்த மாதம் 18ந் தேதி மந்திரி சபை உப-கமிட்டி என்கிற பேரால் ஒரு நான்கு மந்திரிகள், கல்விச் சீர்திருத்தம் என்கிற பெயரில் கூடி பத்திரிகைகளுக்குத் தந்திருக்கும் செய்தியைக் கவனிப்போம்.

இந்தியா—இந்துஸ்தானியா என்று இன்னும் முடிவுகட்டப்படாத நிலையில், இந்தியைப் போதிப்பதென்றும் அதைத் தமிழ் எழுத்தில் சொல்லித்தர ஊக்குவிப்பதென்றும் இந்த உப-கமிட்டி ஒரு முடிவு செய்திருக்கிறது.

முடிவுசெய்யப்படாத இந்தியை முதல் பாரத்திலிருந்து தொடங்குவதா? இரண்டாம் பாரத்திலிருந்து தொடங்குவதா? என்பதை அந்த அந்தப் பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகளுக்கே விட்டுவிடுவது என்று மற்றொரு முடிவு செய்திருக்கிறது.

பாடங்கள் எல்லாம் தாய்மொழியில் என்கிற பொதுவிதியை மாற்றிச், சரித்திர பாடத்தை மட்டுமாவது இந்தி மொழியில் 4,5,6 பாரங்களில் கற்பிக்கச் சிபார்சு என்பதாக ஒரு முடிவு.

ஒரு பிரதேசத்தில் வேறு தாய்மொழியைக் கொண்டவர்களாய் இருந்தால், அவர்களுக்கு எந்த மொழியில் பாடங்களைப் போதிப்பது, அந்த அதிகச் செலவை யார் ஏற்பது என்கிற விஷயங்களிலும் முடிவுகள் செய்திருக்கிறார்கள்.

இந்தியைத் திராவிடர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதை மீ

மிக நன்றாக, தெளிவுபட வற்புறுத்தி விளக்கிச் சொல்லப்பட்டு வருவதை யறிந்துகொண்டிருந்தும், இந்த மந்திரிசபை உப—கமிட்டி அதாவது மாறுதல் செய்ய முன்வந்த உப—கமிட்டி, அதற்கேற்றவாறு காரியம் செய்யவேண்டும் என்பதைச் சிறிதாவது கவனித்திருக்கிறதா? என்றால் அது சந்தேகமே.

இளம் மாணவர்கள் தலைமையில் ஏககாலத்தில் மூன்று மொழிகளைச் சுமத்துவது, தலைக்கு மிஞ்சிய பாரம் என்பது மட்டும் எதிர்ப்புக்குக் காரணமல்ல. பயனற்ற ஒருமொழியை—மூடநம்பிக்கைக்கும் பிற்போக்குக்கும் காட்டுமிராண்டித் தன்மைக்கும் கருவியாக இருக்கும் மொழியை, ஏன் இந்த நாட்டில் புகுத்த வேண்டும் என்பது தான் எதிர்த்து வருபவர்களின் கேள்வி. இந்தக் கேள்வியை அநியாயமானது அல்லது அபாண்டமானது என்று எந்தக் காரணங்கூறியும் மறுக்க முடியாத நம் மந்திரிகள், அந்தக் கேள்வியை உண்மையென்று ஒப்புக் கொள்கிறார்கள் என்றால், அதற்கல்லவா முதலில் பரிகாரம் செய்ய முன்வர வேண்டும். அதை விட்டு விட்டு ஏதோ ஒரு மாறுதல் என்று பேருக்காகச் செய்வதென்றால், அந்த மாற்றம் எப்படிமக்களுக்கு மன மாறுதலை உண்டாக்கும்?

தமிழ் எழுத்து மூலம் அல்லது தாய்மொழி எழுத்து மூலம் இந்தி கற்பிக்கப்படும், தேவநாகரி எழுத்து கைவிடவேண்டும் என்று கூறுவதைக்கூட, வற்புறுத்தி முடிவு கட்டாமல், "பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்கவேண்டும்" என்று தான் இந்த உப-கமிட்டி வாழைப்பழத்தை எடுத்து அழுத பிள்ளைக்குக் காட்டுவது போல் கூறுகிறது. ஆனால் அதே நேரத்தில் 4, 5, 6 பாரங்களில் சரித்திர பாடத்தை மட்டுமாவது இந்தியில் சொல்லிக்கொடுக்க, இந்திப் பிரச்சாரசபையின் சிபார்சின் பேரில், ஆச்சாரியாரின் முத்திரையைக் குத்தி பரிசீலனைக்கும் வைத்திருக்கிறது என்றால், இந்த உப-கமிட்டியின் யோக்கியதையைப் பற்றி எவருக்கும் சந்தேகந்தானே உண்டாகும்?

இந்த உப-கமிட்டியில் அங்கம் வகித்த மந்திரிகள் என்று, தோழர்களான பக்தவத்ஸலம், மாதவமேனன், சந்திரமௌளி, ஏ. பி. ஷெட்டி ஆகிய நால்வரின் பெயர் சொல்லப்படுகிறது. இவர்களில்பெரும்பான்மையோருடைய தகுதி முக்கியமாக முதல் மூவருடையதகுதிஎன்னவென்றால், திராவிடக்கழகத்தார் என்னென்னகூறுகிறார்களோ, அதையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு மறுப்பதுவே தங்களுக்குத் தகுதி என்று கருதிக் கொண்டிருப்பவர்கள் ஆவார்கள். திராவிடக் கழகத்தார் மேட்டை மேடு என்று கூறினால், அதைப் பள்ளம் என்று சாதிப்பதுதான் தங்களுடைய நித்தியத் தொழில் தங்கள் வாழ்வு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள். இப்பேர்ப்பட்ட மகானுபாவர்களைக் கொண்டு, இந்த நாட்டு மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் ஒரு காரியத்தைச் செய்யச் செய்யலாமா?

எந்த மந்திரி சபை மாறினாலும், இப்போதைய அரசியல் அமைப்பில், அது பனியாக்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் கட்டுப்பட்டதாகவும், அவர்களின் குற்றேவல்களையும் ஏற்றுச் செய்ய வேண்டியதாகவும்தான் இருக்கும் என்பதை, மந்திரிசபைகளைக் காட்டிலும் நாம் நன்றாக உணர்வோம். ஆதலால் இப்போதைய மந்திரிசபை திராவிடர்களின் கருத்தையேற்று அதற்கேற்றவாறு நடந்து கொண்டு விடும் என்கிற நம்பிக்கை நமக்கில்லை.

பனியா ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட வகையில்தான், ஏதோ செய்யவேண்டியதைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது என்று எண்ணுவார்களேயானாலும், திராவிடர்களின் நல் வாழ்வுக்குத் திராவிடர்கள் ஏற்ற விலையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று சொல்லுவதாயிருந்தாலும், நாம் புதிய மந்திரிசபையினருக்குச் சொல்லும் ஆலோசனை இது தான்.

2—வது பாரத்திலிருந்து இந்தியைத் தொடங்கலாம், அல்லது பள்ளிக்கூட நிர்வாகிகளின் இஷ்டத்துக்கு விட்டுவிடலாம் என்கிற ஆலோசனையை, 4-வது பாரத்திலிருந்து தொடங்கலாம் என்று வரையறுத்து, அது கட்டாயமில்லை என்று ஏன் தெளிவுபடுத்தக் கூடாது?

ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாய், இன்று நான்கு மொழியினராகக் காணப்படும் திராவிடர்களுக்கு, வடவர் ஏகாதிபத்தியத்தின் பலவந்தத்தால் புகுத்தப்படும் இந்தியை அல்லது இந்துஸ்தானியை, அவரவர் தாய் மொழி எழுத்தில் கற்றுக் கொடுப்பது என்கிற முறையைக் காட்டிலும், நால்வருக்கும் பொதுவான—என்றைக்கும் தேவையான ஆங்கில எழுத்தில் ஏன் அதை கற்பிக்கக் கூடாது?

இதைப் புதிய மந்திரி சபை சிந்திக்குமா? சிந்தித்துச் செயல் புரியுமளவுக்கு உரமுண்டா?

---

## ஏமாற்றுப் பிழைப்பு எத்தனை நாள்?

அண்மையில் சென்னை மாகாணத்திற்குக் கனம் ஆச்சாரியார் வந்த முக்கியகாரணங்கள் இரண்டு என்று கூறலாம். ஒன்று திருவண்ணாமலையில் புராணப் பிரசாரம் செய்வது, மற்றொன்று 'கல்கி' மகளார் திருமணத்திற்கு விஜயம் செய்வது. அந்த இரண்டு அலுவலின் நடுவே நம் தலைவர் பெரியாரவர்களையும் கண்டு பேசினார் ஒருமணி நேரத்திற்குமேல். "அந்தப் பேச்சு முற்றுமே சொந்தப் பேச்சு, நீங்கள் ஒன்றும் கற்பனை செய்யவேண்டாம்" என்று கூறிவிட்டார் ஆச்சாரியார். "இன்னும் சிறிது காலத்தில் அதன் உண்மை விளங்கு"மென தங்களின் பேச்சைப் படம் பிடித்தாற்போல் அறிக்கை விடுத்துள்ளார் தலைவர் அவர்கள். இருவர் சந்திப்பும் தென்னாட்டின நற்காலம் என ஆசி கூறியுள்ளார் திரு வி. க.

அடுத்து மூன்றாவதாக ஆச்சாரியார் சுதேசமித்திரன் ஆசிரியர் சீனிவாசன் அழைப்புக்கிணங்கி பெங்களூர் போய் அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் மாநாட்டைத் திறந்துவைத்துள்ளார்.

சிறிது காலத்திற்கு முன் சென்னையில் நடந்த தென்னிந்திய பத்திரிக்கையாளர் மாநாட்டில், சென்னை பிரதமர் குமாரசாமி ராஜா பேசுகையில் நம் 'கல்கி'க் கும்பல் நம்மை ஒழிக்கவேண்டுமென எவ்வளவோ பூரண கும்பம் எடுத்தும், மிரட்டியும் பார்த்தபின்னும்கூட அவர்மிகவும்தைரியமாகத் தாம் ஜனநாயக சோஷலிஸ்ட் சமூ

தாயம் அமைப்பதைத் தமது லட்சியமாகக் கொண்டுள்ளதாய்க் கூறி, பத்திரிகைகளின் கடமையை மிகத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

“பத்திரிகைகள் சர்க்காருக்குத் தாசர்களாக இருக்கத் தேவையில்லை; அவை உயர் நீதி மன்றங்களாக விளங்க வேண்டும், சர்க்கார் தவறில்லாதது என்று கூறமுடியாது, ஆகவே அதனைக் கண்டித்துத் திருத்தும் பொறுப்பும் பத்திரிகைகளுக்கு உண்டு” என்பதாகக் கூறினார். அத்துடன் சமுதாயச்சீர்திருத்தப்பணியாற்றும் நம் பத்திரிகைகள் மீது சர்க்காரை நடவடிக்கை எடுக்க ஏவிவிட்டதற்குப் பதில் கொடுப்பதுபோல், பத்திரிகையாளரின் புனிதமான வேலை சமூக அரசியல் சீர்திருத்தங்களுக்கு மக்களை தயார் செய்வதே என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில் சென்னை சர்க்காரைப் பணியவைத்து மிரட்ட வேண்டுமாயின், மேலிடமே சரியெனக் கொண்டு ஆச்சாரியாரை வரவழைத்துப், பழைய பல்லவியையே பாடி, மஞ்சள் பத்திரிகைகள் எனக் கண்டித்து இடையிலேயே (திருட்டுத்தனமாக நுழைபவனைப்போல்) வகுப்புவாதப் பத்திரிகை எனவும் கூறிக் கண்டித்துப், புலம்பிஒப்பாரிவைத்துள்ளது ஆரியம். நாமேலாராகவே முற்றும் கூடியுள்ளோர் மாநாட்டில் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

நமது பத்திரிகைகளுக்கு விற்பனை அதிகமில்லையே, மேல்நாட்டில் அதிகம் விற்பனையாகிறதே என்பது அதன் ஒப்பாரி. ஆனால் அதன் புலம்பலை அதிகரிப்பது, நாட்டில்திராவிடப்பத்திரிகைகளுக்கு செல்வாக்கு வேறு அதிகரிக்கிறது, விற்பனை பெருகுகிறது என்பதே. சென்னைப் பிரதமர் சீர்திருத்தத்திற்கு மக்களை தயாராக்கக் கேட்டுக் கொண்டதற்கு நேர்மாறாக கரைகிறார் மாநாட்டுத் தலைவர். “சீர்திருத்த உத்வேகத்தில் ஏற்கனவே உள்ள சமூக, பொருளாதார அமைப்பைமாற்ற முயற்சிப்பதன் மூலம் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்யாமல் இருப்பது சர்க்காருக்கு விவேகமாக இருக்கும்” என புத்தி புகட்டுகிறார் மித்திரன் ஆசிரியர். சர்க்காரையே, புதுவாக்காளர் ஜாபிதாப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல, ஆகவே இது சுதந்தர சர்க்காரல்ல என மிரட்டியுள்ளார் அவர். உண்மையில், நேர்மையில்நாட்டமுள்ளவராக இருந்தால், இன்றைய அரசியல் நிர்ணயசபையே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சரியான பிரதிநிதிகளைக் கொண்டதல்ல, ஆகவே இதன் நடவடிக்கை செல்லாது என்று கூறியிருக்கவேண்டும். ‘மேலும் ஆச்சாரியாரே! இனி கவர்னர் ஜெனரல் வேலை உமக்கு வேண்டியதில்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே எங்களுக்கு வேண்டும், உடனே ராஜினாமாச் செய்க’ என யோசனை கூறியிருக்கவேண்டும். செய்யுமா, ஆரியம்? தம்இனத்தவரல்லவா மேலே உள்ளவர். இப்படிச் சர்க்காரை மிரட்டிவிட்டு, விற்பனை வரியைக்கண்டித்து “பத்திரிகைகள் விரும்பினால் தங்கள் எதிர்ப்பைப் பலப்படுத்தி, சர்க்காருக்குத்தர்மசங்கடமான நிலையை உண்டாக்கும்என்றும் எச்சரிக்கிறார். இந்த அதிமேதைகள் மாநாட்டில், ஒரு சிறு வேடிக்கையான தீர்மானமும் செய்யப்பட்டிருக்கிறது. விபசாரிகள் ஒன்று கூடிச்சோரம் போகாதிருக்க, அந்த விபசாரிகளடங்கிய ஒரு கமிட்டியே பார்த்துக் கொள்ள வேண்டுமென தீர்மானிப்பது போல், உண்மைச் செய்திகளைத் திருத்திக் கூறுவதையும் இருட்டடிப்புச் செய்வதையும், இந்த நாணயஸ்தர்களின் அந்தத் தீர்மானம் கண்டித்துள்ளது!

தமிழ் நாட்டில் எந்தப் பத்திரிகைகள், செய்திகளைத் திருத்திக் கூறுகின்றன என்பதற்கு நாம் எடுத்துக் காட்டுகள் காட்ட வேண்டியதில்லை. உலக உத்தமர் காந்தியாரைக் கொன்றது கோட்சே எனும் பார்ப்பனன் என்ற செய்தியை மறைத்தது எந்தத்திருக்கூட்டமெனக் கேட்கிறோம்? அதனைத் திரித்து மகமதியர்கள் மீது ஆத்திரத்தை மூட்டியது எந்தக் கூட்டத்தினர்? அதன் விளைவாக ஈரோடு, திருவண்ணாமலை போன்ற ஊர்களில் நடந்த கலவரத்தைக் குறித்துக் கண்டித்து ஒரு வரிகூட எழுதாதது எவை? இவற்றை அவ்வளவு சீக்கிரமாக மக்கள் மறந்து விட்டார்களா அன்றி மக்கள் மன்னிக்கத்தான் முடியுமா?

10 அல்லது 20 பேர் ஓர் அறையினுள் உட்கார்ந்து கொண்டு, பல்லாயிர மக்கள் கூடியதாகவும், சர்க்கார் போக்கையும், கருஞ்சட்டையினரையும் கண்டிப்பதாகவும் செய்திகள் வெளிவருவது எதனில்? மக்களுக்குக் கீழ்தர எண்ணம் உண்டாகும்படியான ஆபாசச் செய்திகளையும் விளம்பரங்களையும் வெளியிடும் செய்தித்தாள்கள் எவை?

திருச்சி, மதுரை, தூத்துக்குடி, ஈரோடு ஆகிய இடங்களில் லட்சக்கணக்கில் மக்கள் கூடிய மாகாண மாநாடுகளை முற்றும் இருட்டடிப்புச் செய்தது எந்த இனப் பத்திரிகைகள்?

சென்னைக்கு ஆச்சாரியார் வந்து போக, திராவிடக் கழகத்தாரை தலைவருட்பட கூட்டமாகக் கைது செய்து, பின் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டதை; எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர். என்று திருத்திப் பொய் எழுதியது எந்தத் திருக்கூட்டப் பத்திரிகைகள்? அண்மையில் உடுமலைப்பேட்டையில் தலைவர் பெரியார் அவர்கள் மற்ற மூவருடன் கைது செய்யப்பட்டு, சொந்த நம்பிக்கையின் மீது விடுதலை செய்யப்பட்டதை, ஜாமீனில் விடுதலை அடைந்ததாக திருத்தி எழுதியது எவை?

இவ்வளவையும் மறந்து இப்படி ஒரு தீர்மானம் போடுவதென்றால் யாரை ஏமாற்ற? ஏமாற்றுப் பிழைப்பு எத்தனை நாள் செல்லும்?

புதிய வெளியீடு! விற்பனைக்குத் தயார்!!

பெரியாரவர்கள் எழுதிய

“திருக்குறளும் திராவிடர் கழகமும்”

விலை 0-2-6.

வேண்டுவோர் 0-3-3 ஸ்டாம்புடன் எழுதுக.

“குடி அரசு” பதிப்பகம், ஈரோடு.

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

நமக்கு சிறிதளவு இவ்வுலக சரித்திரம் தெரியும்; மனித இனத்தைப்பற்றியும் சிறிது தெரியும். மனிதன் தேவைக்கும், போருக்குமிடையே, இன்னலுடன் போரிட்டு வாழ்ந்ததையும்; கொள்ளை நோய்க்கும், பஞ்சத்திற்குமிடையே மூடத்தனத்திற்கும், குற்றத்திற்குமிடையே; பயத்திற்கும், நம்பிக்கைக்குமிடையே இந்தப் பழமையான உலகில் கோடிக்கணக்கான ஆண்டுகளாக இன்னலில் உழன்று வந்திருக்கிறான் என்பதையும் நாமறிந்துள்ளோம்.

கடைசியாகத் தன்னம்பிக்கையற்ற போப்பாண்டவர்களும், எண்ணிலாப்பாதிரிமார்களும், குருமார்களும், 'கடவுள்' என்று கூறப்பட்டோரும், புனித ஆவியால் நிரம்பப்பெற்றவர்களும், கல்லூரித் தலைவர்களும், அரசர்களும், —சக்ரவர்த்திகளும், நாட்டுப் பாதுகாப்பு உறுப்பினர் முதலியவரும், எல்லையற்ற கடவுளுக்கு மக்களைச் சம்பந்தப்படுத்தத் தவறுதலான—மூட காட்டுமிராண்டிக் கற்பனையினால் ஏற்பட்ட சாதனங்களாகும் என்பதையும் தெரிந்து கொண்டுள்ளோம்.

கடைசியாக உற்பத்தியின்—ஆரம்பத்தின் கதையைக் கூறிய 'புனித புத்தகத்தில்' பொய்மை மட்டுமல்ல, சாட்சியமற்ற மடத்தனமானவைகள் நிரம்பியிருப்பதையும் உணர்ந்துகொண்டோம். தெய்வ வாக்கால் எழுதிய எழுத்தாளர்கட்கும் ஒன்றுந் தெரியாது; வாக்குக் கூறிய கடவுளுக்கும் ஒன்றுந் தெரியாது என்பதை இப்போது அறிந்துகொண்டிருக்கிறோம்.

தெய்வீகமும், பொய்மையும் இதற்குமேற்பட்டு நம்மைத் தவறான வழியில் அழைத்துச் செல்லவியலாது. நாம் உண்மையைத்தான் நம்புகிறோம். உலகம் நம்முடைய சாட்சி; தாரகைகள் நமக்கான சோதிக்கும் குழு.

உலகாயுதம் யாது செய்துள்ளது?

அவர்கள் எல்லா மதங்களையும் ஆராய்ந்தார்கள், புனித புத்தகங்கள் என்பவைகளை படித்தார்கள், போதனைகளையும், கற்பனைகளையும், ஒழுக்கச் சட்டங்களையும் படித்துவிட்டு ஆராய்ந்தார்கள். அவர்கள் குறியீடுகளை—நடப்புகளை—பிரார்த்தனைகளை —பலிகளையெல்லாம் கற்றுக்கொண்டார்கள். எல்லா மதங்களும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருப்பதையும், உண்டாக்கப்பட்ட காரணங்களும் ஒன்றுபோல் இருப்பதையும், அவை யாவும் இயற்கை உண்மைக்கு எதிராக—தவறாக எண்ணங் கொண்டிருப்பதையும், அவை யாவும் மூடதனத்திலும், பயத்திலும், தவறிலும், அதிசயத்திலும் எழுதப்பட்டவைகளாகும் என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

கிருஸ்து மதமும் மற்றவை போன்ற ஒன்றுதான் என்றும்; அது கடவுளால் கூறப்பட்டதல்ல, ஆனால் இயற்கையில் ஏற்பட்டது என்பதையும்; அதன் கடவுளர்கள், [illegible]கள், மோட்சம், நரகம் எல்லாம் வாங்கப்பட்டது என்பதையும்; அதன் நடப்புகள், பூசைகள் யாவும் மற்ற மதங்களின் பிரதிதான் என்[illegible]தையும்; அதன் ஒரு பகுதிகூட மோட்ச உலகினின்றும் வந்ததில்லை; ஆனால் இவை யாவையும் உற்[illegible]த்தி செய்[illegible]தால் காட்டுமிராண்டி மனிதன் எ[illegible]பதையும் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அவர்கள் ஜ[illegible] காவா ஒரு கா[illegible]டுமிராண்[illegible] [illegible] பதையு[illegible]: [illegible] மூ[illegible] [illegible]ல்லாம் [illegible] [illegible] [illegible]ரிஸ், [illegible], [illegible] [illegible]தெலி[illegible] [illegible] [illegible]ரயி[illegible] [illegible]தையும்; [illegible] மூ[illegible] [illegible]ின் [illegible]மிரா[illegible] [illegible]ருவன் [illegible]தையும் கண்டுபிடித்தார்கள்.

அவர்கள் புனிதப்புத்தகங்களிலே தவறான தெய்வ வாக்கும், சாட்சியமற்ற புனிதங்களும் நிறைந்திருப்பதைக் கண்டார்கள்.

ஆனால் கிருஸ்தவர்கட்கு—நமக்கு ஒரேஒரு தெய்வீக புத்தகந்தான் இருக்கிறது. நமக்குப்பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இருக்கிறது. பழைய ஏற்பாடு எங்கிருந்து பெறப்பட்டது? யூதர்களிடமிருந்தா? ஆம்!

அதை நான் உங்களுக்குக் கூற ஆசிக்கிறேன்!

கி. மு. 400-ல் பாபிலோனினின்றும் யூதர்கள் திரும்பியபோது, எசரா என்பார் விவிலிய நூல் எழுத ஆரம்பித்தார். இதற்கோர் ஆதாரம் விவிலிய நூலிலே காணலாம்.

நமக்குத் தெரியும் ஆதியாகமம் அறிந்து கொண்டபின்பே எழுதப்பட்டது என்பது. ஏனெனில் பாபிலோனியர்களிடமிருந்தே யூதர்கள் உற்பவக் கதையும்; ஆதாம் யேவாள், தோட்டம், பாம்பு, உயிர் மரம், வெள்ளப்பெருக்குக் கதைகளும், சாப தண்டனை முதலியனவும் கற்றுக்கொண்டார்கள்.

புனித நாளைப்பற்றி; ஜட்ஜஸ், ஜாசுவா, சாமுவேல், கிங்ஸ் அல்லது கரானிகல்ஸ், ஜாப், சாம்ஸ், எஸ்தர், சாலமுன் பாடல்கள் அல்லது எக்லிஸ்யாட்ஸ் முதலிய எந்தப் பகுதிகளிலும் கூறப்படாததை நீங்கள் உணரலாம். பாபிலோனின்றும் திரும்பியபின் இசரா எழுதிய புத்தகங்களில்மட்டுமே புனித நாளைப்பற்றிக் காணலாம்.

இசரா 'தெய்வ வாக்கை' எழுதி முடித்தபின் அதை ஒரு கோயிலிலே வைத்தார் அதை மிருகத் தோலிலே எழுதியிருந்தார். நாமறிந்தவரை ஒரே ஒரு பிரதிதான் இருக்கிறது.

இந்த விவிலிய நூலுக்கு யாது நிகழ்ந்தது.

கி. பி. 70-ம் ஆண்டில், டிடுஸ் என்ற வர்க்கத்தாரால், ஜெருசலேம் நாடு கைப்பற்றப்பட்டது. அப்போது அந்தக்கோயில் (இசரா விவிலிய நூல் எழுதிவைத்திருந்த கோயில்) அழிக்கப்பட்டது. ஜோசபெஸ் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க 'புனித' விவிலிய நூல், உரோம் சாம்ராஜ்யாதிபதி வெஸ்பசியன் என்பாருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதுகாறும், யாரும் இந்தப்

புனித விவிலிய நூலைக் கண்டதோ, கேட்டதோ இல்லை. அவ்வளவுதான் அதைப்பற்றியது.

[illegible]ம்பு செப்கெயின்ட் என்ற பெ..ரிஷே விவிலிய நூலின் பிரதி அல்லது மொழி பெயர்ப்பு இருந்தது.

அது யாங்ஙனம் வந்தது?

டாலமி சாடர் என்பாரும், அவருடைய மகன் டாலமி பில்டெலபஸ் என்பாரும், யூத விவிலிய நூல் மொழி பெயர்ப்பை பெற்றார்கள் எனக் கூறப்படுகிறது. இந்த மொழிபெயர்ப்பு எழுபது பேர்களால் எழுதப்பட்டது.

அச் சமயத்தே யூத விவிலிய நூலில் டானியல், எக்லியாஸ்டஸ் என்ற பகுதிகள் இருக்கவில்லை; ஆனால் சிறிது சாம்ஸும், ஒரு சிறிது இசய்யா பகுதிகளுமே இருந்தது. செப்டகயின்ட் என அழைக்கப்பட்ட மொழிபெயர்ப்பு நூல் யாதாயது?

இது பிருச்சியம் வாசகசாலையில் கி. மு. 47-ம் ஆண்டில் எரிக்கப்பட்டது.

பின், பென்டாடெச்சின் சாமரிடன்ரோல் என அழைக்கப்பட்ட விவிலிய நூல் பகுதியின் பிரதி இருந்தது.

ஆனால் இது எந்தவித மதிப்புடையதாக இருக்கவில்லை.

ஜெருசலேம் கோயிலிலே இருந்த உண்மை விவிலிய நூலின் பிரதி— உரோம் சாம்ராஜ்யாதிபதியான வெஸ்பசியனுக்கு அனுப்பி வைத்த உண்மைப் பிரதி ஒன்றாகிலும் நம்மிடம் இப்போது இருக்கிறதா?

ஒருவருக்கும் தெரியாதே

(தொடரும்)

---

(7ம் பக்கத்தொடர்ச்சி)

யிலே பத்து இலட்சம் தொழு நோயர் உள்ளனர் என்றால் வெட்கப்பட வேண்டாமா? மகான்களும், அவர்களது பின்னோடிகளும்!

இன்றளவும் இந்தத் தவ சிரேஷ்டர்கள் உருப்படியாகச் செய்தவை என்ன என்று நெருக்கிக் கேட்டால் ''நான் யார்'' கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் என்ற பதில் தானே கிடைக்கும். தன்னைத் தான் அறிந்து ஆத்மார்த்திக வெற்றியையும் தத்துவ விசாரணையைப் பற்றிய சங்கதி ஒருபுறமிருக்க, இந்தக் கேள்வி—முயற்சி இப்பொழுது அவசியமா என்பதைச் சிந்திக்க வேண்டும். பசி தீர்க்க வழி எது, நோய்க்குச் சரியான மருந்துண்டா, பஞ்சம் வராமல் பாதுகாத்தல் எப்படி என்ற இம்மாதிரி உடலும் உயிரும் இரண்டாகாமலிருக்க வேண்டிய 'ஜீவநாடிப் பிரச்சினை' களுக்கே மனித இனம் இன்னும் பதில் தெரியாது திகைத்து, பதில் தெரிந்தாலும் அதை அமுல் நடத்தப்போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், 'நான் யார்' என்பதுதானா வெகு முக்கியம்? வேண்டுமானால் எல்லோருக்கும், சொந்த மாளிகையும் தோட்டமும், ஊரை ஏமாற்றிச் சேர்த்த பொருளும், அதனைக் கவலையற்று, கண்காணிக்கச் சர்வாதிகாரிகளும் கூட வேண்டாம், உண்ண உணவும் உடுக்க சாதாரண உடையுமாவது கிடைக்கட்டும், ஓய்வு கண்டபோது, பொழுது போககாகத் தத்துவ விசாரணையை வைத்துக்கொள்ளலாம்!

பாதாள லிங்கக்குகையை இப்பொழுது திறக்க என்ன அவசியம் நேரிட்டதென்பதும், அதுவும் ஒரு கவர்னர் ஜனரலால் அது நடத்தப்பட வேண்டியது முக்கியம் தானா என்பதும் நினைக்கத் தக்கதாகும். திராவிடர் கழகக் கொள்கைகள் தற்பொழுது நாட்டில் காட்டுத்தீ போலப் பரவ ஆரம்பித்து விட்டது. அதைக்கண்டு வைதிகத்தின் வயிற்றில் நெருப்புப்பற்றிக் கொண்டது. எப்பாடுபட்டாவது எதிர்ப்பிரசாரம் தொடங்கவேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டுவிடவே, இம்மாதிரி கொல்லைப்புற விளம்பர வழியைக் கடைப்பிடிக்கிறது சனாதனம். பகுத்தறிவியக்கம் தனது கொள்கைகளை, அவற்றில் உண்மையுள்ளது, சிந்தித்தால் மக்கள் ஒப்புக்கொண்டே தீர்வர் என்ற நம்பிக்கையுடன் மக்கள் மன்றத்தில் வைக்கிறது. ஆனால் வைதீகம் தனது குருட்டுக் கோட்பாடுகளை அதே முறையில் மக்கள் முன்னிலையில் நீட்டினால் எள்ளி நகையாடப்படும் என்பதை உணர்ந்தே, ஆட்சி பீடத் தலைவர்களைக் கொண்டு வந்து திறப்பு விழாவாற்றுகிறது, அப்போதாவது கூட்டம் கூடாதா, விளம்பரம் கிடைக்காதா, தனது சாவோலையைச் சற்று தடுத்து நிறுத்தாதா என்ற எண்ணத்திலே. ''பிரபல சினிமா நட்சத்திரம் கோலாகல சுந்தரி எமது சீப்புகளையே உபயோகித்து அழகாக விளங்குகிறார். அவர் புகழுக்கு எங்கள் சீப்புகளே காரணம்'' என்ற மாதிரியில் விளம்பரத்தைப் பார்க்கிறோமே அந்த ரகத்தைச் சேர்ந்தது கவர்னர் ஜனரலைக் கொண்டு கருங்குகையைத் திறந்த செய்கை!

கவர்னர் ஜனரல் காரிருள் குகையைத் திறக்கும் 'கைங்கரியத்'தைச் செய்த வேளையிலே, அவர் கீழுள்ள இந்திய அரசாங்கம், ஆஸ்திரேலிய விஞ்ஞானி கண்டுபிடித்த செயற்கை மழைத் திட்டத்தை இந்த நாட்டிலும் அமுல் நடத்த ஆலோசனை செய்து வந்தனர் என்ற செய்தியையும் அதே நாளைய இதழ்கள் அறிவித்தன. மத்திய அரசாங்கம் என்ன நாஸ்தீக அரசாங்கமா? ஏன் வருண ஜெபத்தில் அதற்கு நம்பிக்கையில்லையா? இந்தியப் புராதனப் பண்பாட்டையும், ஆத்மீக சக்தியின் பெருமையையும் பற்றிப் பிரச்சாரம் செய்த ஆச்சாரியாராவது தமது அரசாங்கத்துக்கு அறிவுறுத்தவேண்டாமா? ''என் தோழர்களே! வேண்டாம் இந்த விபரீதப் போக்கு. நம் நாட்டிலே கண்டுபிடித்த முறைகளெல்லாவற்றையும் கைவிட்டு விட்டு, அஞ்ஞானிகள் கண்டுபிடித்த திட்டங்களை ஏன் அவதார புருஷர்கள் தோன்றிய நாட்டில் புகுத்துகிறீர்கள்'' என்று கேட்கவேண்டாமா? எப்படிக் கேட்பார்? அவரே வெள்ளையன் செய்த விமானத்தில் புது டில்லியிலிருந்து சென்னைக்கு வந்து, ஆங்கிலேயன் அறிமுகப்படுத்திய ரயிலில் திருவண்ணாமலை சேர்ந்து, அமெரிக்க மோட்டாரில் மலையடி அடைந்து, மேனாட்டு விஞ்ஞானிகள் உலகத்துக்கீந்த ஒலிபெருக்கியின் மூலம் பழம் பெருமை, புராதன நாகரீகம், ஆத்மார்த்தீக தத்துவங்களைப் பற்றி அழகாகச் சொற்பொழிவாற்றுகிறாரே!

அதோ, அறிவுலகம் நகைக்கிறது! பகுத்தறிவு வாதிகள் நாட்டு நிலை நாசமாக்கப் படுவதைக் கண்டு பதைக்கின்றனர்! அறியாமை இருள் போக்கி அறிவு மன்றத்துக்குத் திறப்பு விழாச் செய்யவேண்டிய ஆச்சாரியார் அவர்கள், அறியாமையை நிலைநிறுத்தி அதனூடே, சற்றுகூட அறிவுக் கதிரொளி படாதவாறு பாதுகாக்கப்பட்ட பாழிருட்டுகுகைக்குத் திறப்புவிழாவாற்றிய வேதனையூட்டும் செய்கை, இந்த நாட்டைப்பிடித்திருக்கும் கேடுகாலம் இன்னும் நீங்கவில்லை என்பதையே காட்டுவதாகும். மாற வேண்டாமா இந்தப் போக்கு?

''சம்மட்டியார்''

# புதிய திராவிடத்தின் அரசியலமைப்பு.

★

விடிவு காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது! திராவிடர் கழகத்தின் இலட்சிய வானத்தில் விடுதலை கதிரவன் உதயமாகிறான்! நாம் நமது இலட்சியத்தில் வெற்றிபெற்று-விடுதலை பெற்ற திராவிடப் பொன்னாட்டின் குடிமகனாகத் திகழப்போகிறோம் என்ற நம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெற ஆரம்பித்துவிட்டன!

காலம் மாறிவிட்டது! கருத்திலே புத்தம் புதிய புரட்சி தோன்றிவிட்டது. மக்களின் எண்ணத்திலும், ஏற்பாட்டிலும் புதியதோர் எழுச்சியைக் காண்கின்றோம். இனி என்றும் எவராலும் அடக்கமுடியாத குமுறல் திராவிடர்களின் உள்ளத்தில் மண்டி எழுந்துவிட்டது. இன்று துலங்கி இருக்கும் விடுதலைப்போராட்டம் திராவிடப் பொனநாட்டின் விடுதலை விழாவன்றுதான் முடிவுபெறும். இந்த இன்ப நாளைக் காண ஆயிரக் கணக்கான இளைஞர்கள் பச்சை இரத்தம் பரிமாறவும் தயங்கமாட்டார்கள். பிறந்த பொன் நாட்டின் விடுதலைக்காகவும், தன்னுடைய சமுதாயத்தின் வருங்கால நல்வாழ்விற்காகவும் தன் உயிரையும் பணயம் வைத்துப்போராட எண்ணற்ற காளையர்களும், பாட்டாளிகளும் முன்வந்துவிட்டார்கள்.

தென்றல் புயலாகிவிட்டது. சில் விட்டுக்கிடந்த திராவிட மக்களின் இரத்தம் கொதிப்பேறிவிட்டது. இனி எவரும் இந்த நாட்டை ஆள்வதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று எக்காள மிடுகின்றனர் சிங்கக்கூட்டம். இதைக் கண்டு நையாண்டி செய்கின்ற நயவஞ்சக நரிச்கூட்டம் நாளை ஏமாந்து போவது உறுதி.

நமது கோரிக்கை மண்ணுக்குரிய மக்களின் உரிமைப் போராட்டமே தவிர மண்ணாசை அல்ல. உலகில், இதுவரை எந்தப்பகுதியில்தொடுக்கப்பட்ட உரிமைப் போராட்டமும் தோல்வியுற்றதில்லை என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. இந்த நாட்டில் மட்டும் சில எத்தர்கள்—தங்களை அரசியல் மேதைகள் என்று தாங்களே கருதிக்கொண்டிருக்கும் ஓட்டை ஓடசல்கள்—நமது கோரிக்கையை நையாண்டி செய்து பேசியும் எழுதியும் வருகின்றனர். நாம் கோரும் திராவிட நாட்டிற்கு அதன் பிற வட்டாரங்களில் ஆதரவு இல்லை என்றும், மொழி வழி மாகாணங்கள் ஏற்படப்போவதினாலும், ஆந்திரர்கள் போன்றவர்கள்' தமிழ் நாட்டுடனோ அல்லது ஏனைய வட்டாரத்துடனோ சேர்ந்து வாழ விரும்பாததினால், திராவிட நாடு ஏற்பட முடியாது என்றும் குதர்க்கவாதம் செய்யஆரம்பித்திருக்கிறார்கள். இந்த வஞ்சகர்கள் மக்களிடையே எற்படுத்தியிருக்கும் பிழைபட்ட அபிப்பிராயங்களைப் போக்குவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம். எனவே, இவை முடிந்த முடிபென்று கருத வேண்டியதில்லை. சுதந்தர திராவிடக் குடிஅரசின் அரசியல் அமைப்பைப் பின்னாளில் கூடப் போகும் புதிய திராவிடத்தின் அரசியல் அமைப்பு சபைதான் நிர்ணயிக்கும்.

## அரசியல் அமைப்பு மன்றம்.

அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாட்டிற்கு அதற்கெனத் தனியான அரசியல் முறை எதுவும் இருக்காது. அடிமைப் படுத்தியிருக்கும் நாடு வகுக்கும் சட்ட திட்டங்கள்தான் அடிமைப்பட்டிருக்கும் நாட்டை ஆட்சி நடத்துவதாக இருக்கும். அடிமையாக உள்ளநாடு விடுதலை பெறும் பொழுது அல்லது பெற்றவுடன், அதற்கெனத் தனியொரு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக அந்த நாட்டு மக்களால்-பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட-ஒரு அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும். இம்மாதிரி கூட்டப்படும் சபைதான் ஆதிபத்திய உரிமையுடையதாகவும், அந்நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிப்பதாகவும் இருக்க முடியும்.

ஆனால்; இந்தியாவில் தற்பொழுது கூட்டப்பட்டிருக்கும் அரசியல் அமைப்பு சபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதல்ல. அதிகாரம் வகிப்பதும் நாட்டு மக்களிடம் ஓரளவு செல்வாக்குடையதுமான ஒரே கட்சியினரால் அமைக்கப்பட்டிருப்பது. இந்த சபை ஆதிபத்திய உரிமை உடையதென்றோ, ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்டதென்றோ ஒப்புக்கொள்ள முடியாது. எனவே; இந்த அரசியல் அமைப்பு சபையினரால் முடிவு செய்யப்படும் எந்த முடிவும் நம்மைக்கட்டுப்படுத்தாதென்றும், அவை வலுக்கட்டாயமாக நம்மீது திணிக்கப்பட்டால் அதை எதிர்த்துப் போராடுவதென்றும் திராவிடர் கழகத்தாராகிய நாம் தீர்மானித்திருக்கிறோம். நம்முடைய இந்த தீர்மானம் எவ்வளவு நியாயமானது என்பதை விளக்குவதற்கு, தென்னாப்பிரிக்க அரசியல் அமைப்பு சபை செயலாற்றிய காலத்தில் அங்கு நடந்த நிகழ்ச்சிகளை நோக்குவோம்.

தற்பொழுது "தென்னாப்பிரிக்கா யூனியன்" என்று விளங்குவது கேப், நேட்டால் என்ற பிரிட்டிஷ் குடியேற்றங்களையும், ஆரஞ்சு நதிக்கரைநாடு டிரான்ஸ்வால் என்ற டச்சுக்குடியேற்றங்களையும் உடையதாக இருந்தது. 1899-ல் இரண்டு டச்சுக்குடியேற்றங்களும், பிரிட்டிஷ் குடியேற்றங்கள் மீது வலியப் போர் தொடுத்தது. போரில் டச்சு குடியேற்றங்கள் தோற்றுவிடவே அவையும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்டது. ஆயினும் இவை நான்கும் சுதந்தரம் உள்ள தனித்தனி குடியேற்றங்களாகவே பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. இந்த நான்கு குடியேற்றங்களிலும் வெள்ளையர்களைவிட கருப்பு மனிதர்களின் தொகை மிகவும் அதிகமாக அதாவது 100-க்கு 75-பேர் வீதம் இருந்தார்கள். இந்த நான்கு குடியேற்றங்களும் கருப்பு மனிதர்கள் விஷயத்தில், தனித்தனிக் கொள்கையைக் கடைப்பிடித்தால் அவர்களை அடக்கி ஆள்வது முடியாது என்று கருதி, ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக் கொள்வதின பொருட்டு ஒரு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தினார்கள். இந்த சபை 1908-ல் அக்டோபரில் கூடி 4-மாத ஆலோசனைக்குப் பிறகு ஒரு திட்டத்தைத் தயாரித்தது. அப்படியிருந்தும் இந்தத் திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவராமல், மாகாண சட்டசபைகளின் சம்மதத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. இதில மூன்று குடியேற்றங்களின் சட்டசபைகள் சில திருத்தங்களை மட்டும் செய்தன. நேட்டால் அனேக திருத்தங்களைச் செய்து, அந்தச்சட்டத்தையே உருத்தெரியாமல் மாற்றவேண்டும் என்றது. இவை மட்டுமல்ல, திருத்தங்

(4ம பக்கத்தொடர்ச்சி)

விடும்; மனிதத்தன்மை அடைந்துவிடும். ஆகையால் சகோதரர்களே! நீங்கள் இந்த நாட்டின் முற்போக்கிற்கும், உண்மை விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபடவேண்டுமானால், மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள் செய்யப்பட்டவுடன் அதை நேட்டால் மக்களின் சர்வஜன ஓட்டுக்கு விட்டு பார்க்கவேண்டும் என்ற நிபந்தனையையும் ஏற்படுத்தியது. ஆகவே, அரசியல் நிர்ணய சபை மீண்டும் கூடி திருத்தங்களை பரிசீலனை செய்து அசல் திட்டத்தை மாற்றியமைத்தது. இந்த புதிய திட்டத்தை மூன்று குடியேற்றங்களின் சட்ட சபைகள் ஊர்ஜிதம் செய்தது. ஆனால் நேட்டால் சட்ட சபையில் அந்தச் சட்டம் விவாதிக்கப்பட்ட பொழுது பலமான எதிர்ப்பு ஏற்படவே, சர்வஜன ஓட்டுக்கு விட்டு மக்களின் சம்மதத்தைப் பெற்ற பின்னரே நேட்டால் சட்ட சபையும் அதை அங்கீகரித்தது.

பிறகு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இந்தத் திட்டத்தை அங்கீகரித்து சட்டமாக்கியது. நான்கு தென்னாப்பிரிக்க குடியேற்றங்களும "தென்னாப்பிரிக்க யூனியன்" சர்க்காரின் மாகாணங்களாயின. நிற்க,

இந்திய அரசியல் நிர்ணய சபையின் தீர்மானங்களோ, சட்ட சபைகளின் அபிப்பிராயத்திற்குக்கூட அனுப்பப்படாததாக இருக்கும் என்று தெரிகிறது. "சுதந்தர இந்தியாவின் அரசியல் அமைப்பு மசோதாவை அது முடிவான தன்மை பெறுவதற்கு முன்பு, மாகாண சட்ட சபைகளின் அபிப்பிராயத்திற்கு அனுப்பி, மாகாண சட்ட சபைகளின் அபிப்பிராயத்தைதெரிந்து கொண்டு, பிறகு அரசியல் நிர்ணய சபை தன இஷ்டம்போல் தீர்மானித்துக் கொள்ளலாம்" என்ற ஒரு தீர்மானத்தை அ. நி. சபைக்கு அனுப்ப வேண்டும் என்று டாக்டர் லட்சுமண சாமி (முதலியார்) ஒரு தீர்மானம் சென்னை சட்ட சபைக்கு கொண்டு வந்தார். இந்த தீர்மானமே தோற்றுப் போய் விட்டது என்றால்; ஆட்சியில் உள்ளவர்களின் எதேச்சாதிகார போக்கையும், இந்த அ. நி. சபையின் யோக்கியதையையும்சொல்லவாவேண்டும்! இப்பொழுது தென்னாப்பிரிக்காவின் அ. நி. சபையையும், இந்திய அரசியல் நிர்ணய சபையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கு நடப்பது ஒரு கேலிக்கூத்து என்பது நன்கு விளங்கும். நிலைமை இப்படி இருக்கும் பொழுது இந்திய அ. நி. சபையின் முடிவுகளை நாம் ஏற்றுக்கொண்டால் உலகம தெரியாத காட்டுமிராண்டிகள் எனறல்லவா கருதப்படுவோம்.

இந்தியாவில் ஒரே ஒரு அரசியல் நிர்ணய சபை தொழிற்படுவது சாத்தியமற்றதாகப் போய்விட்டது. இதற்குக் காரணம் முஸ்லிம்லீக்கும், பாகிஸ்தான் கோரிக்கையும் தான. அகில இந்தியாவிற்கும் என்ற பெயரால் ஒரே அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி அதை இயங்குவிப்பதற்குக் காங்கரஸ் காரர்கள் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருந்த பொழுது அந்தத் திட்டத்தைத் தகர்த்தெறிந்து, தங்களுக்கெனத் தனி நாட்டையும், தனி அரசியல் நிர்ணய சபையையும் பெற்ற பெருமை லீக்கிற்கும், ஜின்னாவுக்கும் தான் உரியது. இப்பொழுது இந்தியா இரண்டு நாடுகளாக துண்டிக்கப்பட்டு, இரண்டு அரசியல் நிர்ணய சபைகளும் தொழிற் படுகின்றன.

இந்தியா இரண்டாக பிரிக்கப்பட்ட காலத்தில், நம்முடைய திராவிடஸ்தான் கோரிக்கையும் இருந்தது. நியாயமாகப் பார்த்தால் இந்தியாவை மூன்று பாகங்களாக பிரித்து, மூன்று அரசியல் நிர்ணயசபைகளையும் ஏற்படுத்தியிருக்கவேண்டும். இப்படி ஏற்படும், நம்முடைய திராவிடஸ்தான் கோரிக்கை வெற்றி பெறாமல் போனதற்குக் காரணம் வெள்ளையனின் வஞ்சகமும், பார்ப்பன பனியாக் கூட்டத்தின் இருட்டடிப்புச் சதி வேலையும்தான. இருப்பினும் இன்று நாட்டு மக்களிடையே ஏற்பட்டிருக்கும் எழுச்சியைப் பார்க்கும்பொழுது தமிழ்ப் பெரியார் திரு வி. க. கூறியதுபோல் இன்னும் 10 ஆண்டுகளில் திராவிடத் தனித் திருநாடும், அதற்கென தனி அரசியல் நிர்ணய சபையும் ஏற்படத் தான் போகிறது. இதை எந்த சக்தியும் தடை செய்ய முடியாது. இப்படி ஏற்படவிருக்கும் அ. நி. சபைதான் திராவிடர்களின் தலையெழுத்தை நிர்ணயிப்பதாக இருக்கும்.

அரசியல் நிர்ணய சபை இரண்டு வித சந்தர்ப்பத்தில் கூட்டப்படுவதுண்டு. அதாவது பல்வேறுபட்ட காரணங்களால் ஆள்வோர்கள் தங்கள் கீழ்உள்ள நாடுகளுக்கு சுதந்தரம் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது. நெருக்கடியான சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஒப்பந்தம் காரணமாகவும், உணர்ச்சி கொண்ட மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை ஒழித்து அவர்களை அடக்கி ஆள்வது சாத்தியமற்றுப் போகும்பொழுதும் அவர்களுக்குச் சுதந்தரம் வழங்கிவிடுவதாகக்கூறி அவர்களை தங்களுக்கென ஒரு அரசியலை வகுத்துக் கொள்ளும்படி கூறி விடுவார்கள். இந்த முறையைத்தான் இந்தியா, கானடா, ஆஸ்டிரேலியா போன்ற நாடுகள் விஷயத்தில் பிரிட்டன் கையாண்டது.

அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாட்டு மக்கள் "இன்று முதல் நாங்கள் விடுதலை பெற்றுவிட்டோம்" என்று கூறிப் போராட்டம் நடத்தி, போட்டி அரசாங்கத்தையும், அரசியல் நிர்ணய சபையையும் ஏற்படுத்திக் கொள்வார்கள். இந்த முறையைத்தான் அமெரிக்கா பின்பற்றியது. இது போன்ற இரண்டுவித சந்தர்ப்பங்களில் அரசியல் நிர்ணய சபை கூடும். இதில் அடிமை நாட்டில் கூட்டப்படும் அ. நி. சபையைவிட விடுதலை பெற்ற நாட்டில் கூட்டப்படுவதுதான் சிறந்ததாகும். ஆனால், விடுதலை வேண்டிப் போராடும் எல்லா நாடுகளும் இரத்தப் புரட்சி செய்வதென்பது சாத்தியமான காரியமல்ல.

சுதந்தரத் திராவிடக் குடிஅரசை விழையும் நாம் சட்டபூர்வமான கிளர்ச்சிகளின் மூலம் சமாதான வழியிலேயே சென்று விடுதலைபெற விரும்புகின்றோம். அதிகார மமதை கொண்ட ஆளும் வர்க்கம் இதற்கு இடம் கொடுக்காவிடில், ஆயிரக்கணக்கான விடுதலை வீரர்கள் சிந்திய இரத்தச் சேற்றில், பிணவாடை வீசுகின்ற சாக்காட்டிலேனும் சுதந்தரத் திராவிடக் குடிஅரசின் அரசியல் நிர்ணய சபையை அமைத்து புதியதோர் திராவிடத்தை நிர்மாணித்தேதீருவோம்.

## நமது இலட்சியம்.

ஏறக்குறைய 5 கோடி மக்களையும், $1\frac{1}{4}$ லட்சம் சதுரமைல்விஸ்தீரணமும் உடைய திராவிடநாடு-சென்னை மாகாணம்-ஆதிபத்திய உரிமையுடைய தனிச் சுதந்தரக் குடிஅரசாக விளங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். இதுதான் இன்றைய நமது உயிர்ப்பு—வாழ்க்கை இலட்சியம். இந்த 5 கோடி மக்களும் தற்பொழுது மொழியின் காரணமாக தமிழ், ஆந்திரம், கேரளம், கர்னாடகம் என நான்கு பகுதியினராகப் பிரிந்திருந்த போதிலும், இவர்கள் ஒரே இனத்தவர்கள் தான்—திராவிடர்கள்—சரித்திர ஆசிரியர்களின் முடிவு. உடல் அமைப்பு, நாகரீகம், பழக்க வழக்கங்கள், கலை போன்றவைகளை ஆராய்ந்து பார்க்கினும் தென்னாட்டில் வாழும் மக்கள் அனைவரும்—பார்ப்பனர் தவிர-ஒரே இனத்தவர்கள் என்பது நன்கு விளங்கும். இப்படி இன ரீதியில் ஒன்றுபட்டிருக்கும் மக்கள் தங்களுக்குள் ஒரு தனி அரசை ஏற்படுத்திக்கொண்டு வாழ்வது முற்றிலும் இயலும்-அப்படி வாழ்வது தான் இயற்கையும்கூட.

அமையவிருக்கும் திராவிடக் குடிஅரசுக்கு எல்லா அதிகாரங்களையும் உடைய ஒரு "ஒருமை சர்க்கார்" இருந்தால் போதும் என்பதுதான் நம் கருத்து. உதாரணமாக இன்றைக்கு தமிழ், ஆந்திர, கேரள, கர்னாடகம் ஆகியநான்கு பிராந்தியங்களையுடைய தென்னாட்டை, சென்னை அரசாங்கம் என்ற ஒரே சர்க்கார் நிர்வகிப்பதைப்போல், வருங்காலத்தில் "சுதந்தர திராவிட குடி அரசு சர்க்கார்" என்பதுபோன்ற ஒரே அரசாங்கத்தின் கீழ் மேற்கண்ட நான்கு வட்டாரங்களும் இருப்பதுதான் சிறந்தது.

உதாரணமாக 4-கோடி மக்களைக் கொண்ட இங்கிலாந்தை எடுத்துக்

கொண்டால், அங்குமத்தியசர்க்காரைத் தவிர வேறு சர்க்கார் எதுவும் கிடையாது. அங்கு எல்லா அதிகாரங்களும் பார்லிமெண்டிற்குப் பொறுப்பான மந்திரிகளிடம்தான் இருக்கிறது. இம்மாதிரி உள்ளதற்கு "யூனிட்டரி" சர்க்கார் (ஒருமை சர்க்கார்) என்று வழங்கப்படுகிறது. இந்தப் பார்லிமெண்டிற்கு மேல் மன்னரின் அதிகாரம் உண்டு என்ற போதிலும், அங்கு மன்னர் ஒரு பொம்மையாகவே கருதப்படுகிறார். இதுபோன்ற ஒரு ஒருமை சர்க்கார் முறையைத்தான் நாம் விரும்புகிறோம். மொழி, கலை, நாகரீகம், பண்பாடு போன்ற பல்வேறுபட்ட துறைகளிலும் இனரீதியில் ஒன்றுபட்டிருக்கும் ஒரு நாட்டில் ஒருமை சர்க்கார் முறை ஏற்படுவது சாத்தியமல்ல என்று கூற முடியாது. இப்படி ஏற்பட்டால் எல்லா அதிகாரங்களும் பார்லிமெண்டிற்குப் பொறுப்பான மந்திரிகளிடமும், நாட்டின் குடிஅரசுத் தலைவரிடமும்தான் இருக்கும்.

இன்றைய நிலை.

இன்றைய நாட்டு நிலையைப் பார்க்கும் பொழுது வருங்காலத் திராவிடக் குடிஅரசு ஒருமை சர்க்கார் உடைய நாடாக விளங்குவது இயலாதென்று தோன்றுகிறது. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் மொழிவழி மாகாணப் பிரிவினை உணர்ச்சியும், அது விரைவில் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும்தான் இதற்குக் காரணம். ஆயினும் இந்த உணர்ச்சி தவறானது என்றும் கூறமுடியாது. மொழி வழி மாகாணப் பிரிவினையை இன்னும் கொஞ்ச நாள்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று, அதற்கென ஏற்படுத்தப்பட்ட "தார்" கமிட்டி ஆலோசனை கூறியது. இருப்பினும் பிரிவினை உணர்ச்சி வலுப்படவே பிரஸ்தாப விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கக் கூட்டப்பட்ட நேரு, பட்டேல், பட்டாபி அடங்கிய மூவர் கமிட்டியும் மொழிவழி மாகாணப் பிரிவினை ஏற்படப்போவது நிச்சயம்தான், ஆயினும் இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு இந்தப் பிரச்சினையை ஒத்தி வைக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறது.

திராவிடநாடு பிரிவினை உடனடியாக ஏற்படவேண்டியது அவசியம் என்ற சூழ்நிலை ஏற்படும் பொழுது அதன் விஸ்தீரணத்தை குறைக்கவும், நம்மிடையே ஏற்படவிருக்கும் அய்க்கிய உணர்ச்சியை குலைக்கவும், பிரிந்து வாழ்வது சாத்தியமற்றது என்று விஷமப்பிரச்சாரம் செய்யவுமாகிலும் மொழிவழி மாகாணங்களை ஏற்படுத்தி விடுவார்கள் என்று உறுதியாக கூறலாம். இப்படி செய்வார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் என்று சிலருக்குக் கேட்கத் தோன்றும். முஸ்லீம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையை தட்டிக்கழிப்பதற்காக சில இனத் துரோகிகளுக்கு "தேசிய முஸ்லீம்கள்" என்ற மூலாம் பூசி, தங்களுடன் சேர்த்துக்கொண்டு காங்கரஸ்காரர்கள் செய்துவந்த பித்தலாட்டங்களே இதற்குப்போதுமானஎடுத்துக்காட்டாகும். இம்மாதிரிச் சந்தர்ப்பம் வரும் பொழுது திராவிடர்கள் ஏமாந்துவிடக் கூடாது என்பதுதான் நமது வேண்டுகோள்.

மொழிவழி மாகாணப் பிரிவினை விஷயத்தில் தீவிரமாக முயற்சிக்கும் ஆந்திர தோழர்களும், பிறவட்டாரத்தினரும் ஒரு விஷயத்தை நன்றாக யோசிக்கவேண்டும். தாங்கள் சென்னை மாகாணம் என்னும் ஒரே அமைப்பின் கீழ் இருப்பதினால், தங்கள் வட்டாரம் முன்னேற முடியவில்லை என்றும், தனி மாகாணங்களை ஏற்படுத்திக்கொண்டால் எதையோ சாதித்துவிட முடியுமென்றும் கூறுகிறார்கள். மற்றும் சிலர் கூறுவதைப் பார்த்தால் இவர்களின் அதிகார ஆசையும், பதவி மோகமும்தான் மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்றும் தோன்றுகிறது. உண்மையிலேயே நிலைமை இப்படித்தான் இருக்குமாயின் இது மிகவும் வருந்தக் கூடிய விஷயம்.

வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருக்கும் ஒரு தனி மாகாணத்தை ஏற்படுத்திக் கொள்வதால் எந்தவித முன்னேற்றமும் அடைந்துவிட முடியாது என்பதை ஆந்திரர்களும், பிறவட்டாரத்தவர்களும் உணர வேண்டும். உண்மையில் நாட்டிற்கும்-மக்களுக்கும் நலம் தேடும் நோக்கம் இருக்குமானால், இவர்கள் வடநாட்டு தொடர்பிலிருந்து பிரிந்து சுதந்தரமுள்ள மக்களாக வாழ்வதைத்தான் தங்கள் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். இதை இவர்கள் விரும்பாமல், வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருக்கும் தனி மாகாணமே எங்கள் கோரிக்கை என்று கூறுவார்களானால் இதனால் மக்களுக்கு எந்த உருவான பலனும் ஏற்படாது. ஏதோ சிலருக்கு மந்திரி பதவியும், அதிகாரமும் கிடைத்ததோடு முடிந்துவிடும் மாகாணப் பிரிவினையின் பலன். ஆகவே, மொழிவழி மாகாணம் பிரிய வேண்டும் என்று கோருவோர் தங்களின் திட்டத்தை மாற்றிக் கொண்டு முழுவிடுதலைக்காகப் பாடுபடுவார்களாக!

தமிழ், ஆந்திர, கேரள, கர்னாடகம் ஆகிய நான்கு வட்டாரத்தினரும் வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருப்பதினால் முன்னேற முடியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்கள்தான். இந்த நான்கு வட்டாரத்தினர்களும் தங்களின விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்கும் தனித்தனியே போராடுவதைவிட திராவிடர்கள் என்ற இனரீதியில் ஒன்றுபட்டுப் போராடினால் விரைவில் விடுதலை பெறமுடியும். மாற்றானின் சுரண்டுதலுக்கு ஆளான காரணத்தால் சுகவாழ்வு இழந்திருக்கும் நம்மிடையே அய்க்கிய உணர்ச்சி ஏற்படாதவாறு தேசியம் என்ற திரை இடையிலிருந்து தடுத்து வருகிறது. உண்மையை உணரமுடியாத காரணத்தால் தமிழர்கள் தங்களை அடிமைப் படுத்துவதாக ஆந்திரர்கள் சொல்கிறார்கள். இதைப் போலவே ஆந்திரரும், மலையாளிகளும்தங்களைச்சுரண்டுவதாக தமிழர்களில் ஒரு சிலர் கூறுகிறார்கள். சென்னை மாகாணத்தில் உள்ள இந்த நான்கு பிராந்தியக்காரர்களும் தங்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் சுரண்டுகிறார்கள் என்று கருதுவது சுத்தத்தவறு—சுரண்டிக் கொள்ளவும் முடியாது. பொருளாதாரத் துறையில் இந்த நான்கு வட்டாரத்தினர்களை வடநாட்டு மார்வாடியும், குஜராத்தியும் சுரண்டுகின்றனர். அரசியலையோ, நேருவும், படேலும் அடிமைப் படுத்தியுள்ளனர். இந்த உண்மையை உணர்ந்திருக்கும் காரணத்தினால் தான், தமிழகத்திலுள்ள நாம், இந்த நான்கு வட்டாரங்களும் விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் "திராவிடநாடு திராவிடருக்கே" வேண்டும் என்று கேட்கிறோம். இப்படி கேட்கும் நாம், ஆந்திரம் ஆந்திரர்களுக்கு உரிமையுடையது என்பதையும், கேரளம் மலையாளிகளுடையது என்பதையும் மறுக்கமாட்டோம். ஆனால் உண்மையை உணரமுடியாத ஆந்திரர்களும், கேரளர்களும் தங்களுக்கு தனித்தனி மாகாணம் வேண்டும் என்று கேட்கிறார்கள்! இவர்கள் உண்மையை உணர்ந்து "திராவிடநாடு திராவிடருக்கே" என்று முழங்கும் நாள் எந்த நாளோ?

இந்த சந்தர்ப்பத்தில் நமது கூட்டுத் தோழர்களுக்கு 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவில் நடந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அமெரிக்காவில் ஆங்கிலேயர்களுக்கு சொந்தமாக 13 குடியேற்றங்கள் இருந்தன. இவைகளனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்பற்று தனித்தனி நாடுகளாகவே இருந்துவந்தது. ஒவ்வொரு குடியேற்றமும் பிரிட்டிஷாரால் நியமிக்கப்பட்டிருக்கும் கவர்னரின் மேற்பார்வையில் இருந்துவந்தது. 1765-க்குப் பிறகு இந்தக் குடியேற்றத்தில் வசித்துவந்த மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியை விரும்பவில்லை. எங்கோ மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிரிட்டிஷார்களுக்கு தங்கள் மீது தங்களைக் கேளாமல் வரி விதிக்க உரிமையில்லை என்று கிளர்ச்சிசெய்ய

## கோவை மாவட்ட திராவிடர் கழக 7-வது மாநாடு

28-5-49 சனிக்கிழமையன்றும்,

## கோவை மாவட்ட முதலாவது திருக்குறள் மாநாடு

29–5–49 ஞாயிற்றுக்கிழமையன்றும்,

முறையே தோழர்களான டி. பி. வேதாசலம், திரு வி. கலியாணசுந்தரனார் தலைமையில் நடைபெறும்.

அனைவரும் திரண்டு வருக!

2 நாளிரவிலும் பிரச்சார நாடகங்களுண்டு.

சாப்பாடு வசதி உண்டு.

பி. பழனிச்சாமி (பெத்தாம்பாளையம்)

எஸ். ஆர். சுப்பிரமணியம் (திருப்பூர்)

வரவேற்புக் கழகத் தலைவர்கள்.


ஆரம்பித்தார்கள். "மெஸ்ஸாச்சுசெட்ஸ்" என்ற குடியேற்றத்தில் வதிந்துவந்தவர்கள் "சுதந்தர புதல்வர்கள்" என்ற சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு கிளர்ச்சியைத் துவக்கினார்கள். ஏனைய குடியேற்றங்களும் கிளர்ச்சியை ஆரம்பிக்கும்படி அதன தன் தலைவர்களுக்கு வேண்டுகோள் அனுப்பினார்கள். இது சட்ட விரோதமான செயல் என்றும், அந்த வேண்டுகோளை வாபஸ் வாங்கவேண்டுமென்றும் பிரிட்டன் வற்புறுத்தியது. கிளர்ச்சியைத்துவக்கியவர்கள் இதற்கு இணங்காது போனதுடன் போராட்டத்தையும் தீவிரமாக நடத்தினார்கள். மூன்று ஆண்டுகள் போராட்டம் தொடர்ந்து நடைபெறவே, அந்தக் குடியேற்றத்தின் சில சுய ஆட்சி உரிமைகளை ரத்து செய்ததுடன், கிளர்ச்சிக்காரர்களை இராணுவத்தைக் கொண்டு அடக்க பிரிட்டன் முற்பட்டது.

இதையறிந்த மற்ற குடியேற்றங்கள் மெஸ்ஸாச்சுசெட்சு தலைவர்களுக்கு அனுதாபச் செய்தி அனுப்பியதுடன், பென்ஸில்வேனியா குடியேற்றத்தின் தலைநகராகிய பிலடெல்பியாவில் ஒரு மாநாட்டை கூட்டினார்கள். இந்த மாநாட்டிற்கு 13-குடியேற்றங்களும் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பிவைத்தது. இதுதான் அந்த 13-குடியேற்றங்களும் ஒரு அரசியல் காரணத்திற்காக முதல் முறையாக கூடியது. 1774-ல் கூடிய அந்த மாநாடு, பிரிட்டன் அநியாயமான சட்டங்களை ரத்து செய்யாத வரையில் அத்துடன் வியாபாரம் செய்வதில்லை என்ற பகிஷ்கார இயக்கத்தை ஆரம்பித்தது. 1775-எப்ரலில் ஓர் இடத்தில் பிரிட்டிஷ்படைகள் குடியேற்றக்காரர்கள் மீது சுட்டார்கள். அன்றுதான் அமெரிக்க மக்கள் சுதந்தரத்திற்காக முதல் முறையாக இரத்தம் சிந்தினர்.

இதன் பிறகு மேமாதம் அமெரிக்க குடியேற்றங்கள் ஒரு மாநாட்டைகூட்டிற்று. இதற்கு "காண்டி னெண்டில் காங்கரஸ்" என்று பெயர். இந்த மாநாடு பிரிட்டன் மீது போர் தொடுப்பதாக பிரகடனம் செய்து ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரை இராணுவ தளகர்த்தராக நியமித்துயுத்த நடவடிக்கையில் இறங்கியது. பிரிட்டனும் 20,000 துருப்புகளை அனுப்பி யுத்தம் செய்தது. 1776-ஜூலையில் ஒரு மாநாட்டை மறுபடியும் கூட்டி சுதந்தர பிரகடனத்தை வெளியிட்டார்கள். இந்த யுத்தம் 1781-ல் தான் முடிவுற்றது. அய்ந்து வருட காலம் இந்த 13-குடியேற்றங்களும் சேர்ந்து சுதந்தரத்திற்காக நெடும்பெரிய யுத்தத்தை நடத்தினது என்ற போதிலும் அவைகள் தனித்தனி நாடுகளாகவே இருந்து வந்தன. அவைகளுக்குள் எந்தவித பொதுவான அரசாங்கமும் இல்லை. விடுதலைப் போராட்டத்திற்காகத் துவக்கப்பட்ட காண்டினெண்டல் காங்கரஸ் என்ற சங்கமும், இராணுவ தளகர்த்தரும்தான் அந்த 13 நாடுகளுக்கும் பொது அம்சமாக இருந்து வந்தது. 1777-ல் அந்த நாடுகள் தங்களிடைய "அய்க்கிய அமெரிக்க நாடுகள்" என்ற சர்க்காரை ஏற்படுத்திக் கொள்ள ஒரு அரசியல் திட்டத்தைத் தயாரித்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் 1781-ல் தான அமுலுக்கு வந்தது.

இந்த வரலாறு கற்பிக்கும் பாடம் என்ன? தனித்தனி குடியேற்றங்களாக இருந்த அமெரிக்க நாடுகள் தங்களின் பொது எதிரியான பிரிட்டனை ஒழிப்பதற்கு ஒன்று சேர்ந்து ஒரு பெரிய யுத்தத்தை நடத்தியதை நாம் உணர்கிறோம். இதைத்தான் நமது கூட்டுத் தோழர்களான ஆந்திர,கேரள கர்னாடியர்களும் உணர வேண்டும். மெஸ்ஸச்சுசெட்ஸ்காரர்கள் ஆரம்பித்த விடுதலைப் போராட்டத்தை மற்ற 12 குடியேற்றங்களும் ஆதரித்து போராட்டத்தில் தலையிட்டிருக்காவிட்டால் இன்றைய அமெரிக்க சரித்திரமே வேறுவிதமாக முடிந்திருக்கும்.

இன்றைய தமிழகத்தில் துவக்கப்பட்டிருக்கும் திராவிடநாடு விடுதலைக் கிளர்ச்சியை மற்ற வட்டாரத் தோழர்களும் ஆதரித்து போராட்டத்தில பங்கெடுத்துக் கொள்ளாவிட்டால், இவர்கள் வருங்கால திராவிட சமுதாயத்திற்குத் துரோகம் இழைத்தவர்களாகக் கருதப்படுவார்கள். எங்கோ இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு நம்மை அடக்கி ஆள்வதற்கு திட்டம் வகுத்துக் கொண்டிருக்கும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும் முயற்சியைப் பொறுத்தமட்டிலாவது நம்முடன் சேர்ந்து போராடவேண்டும். இந்த சந்தர்ப்பத்தை இவர்கள் இழந்துவிடுவார்களானால் மீள்வதற்கு வேறு வழியே கிடையாது.

புதிய திராவிட குடி அரசின் அரசிலை வகுப்பதற்கு வருங்காலத் திராவிடத்தில் கூட்டப்படும் அரசியல் நிர்ணய சபை ஜனநாயக முறைப்படி பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்கும். வருங்காலப் புதிய திராவிடத்தில்—விடுதலை பெற்ற நாட்டில் கூடும் அரசியல் நிர்ணய சபைதான் திராவிட மக்களின் தலையெழுத்தை நிர்ணயிப்பதற்கு உரிமையுடையதாகும். சுதந்தர திராவிடத்தின் அரசியல் அமைப்பை ஏற்படுத்தும் பொழுது மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டிருந்தால் அந்த மாகாண சட்டசபைகளின் பூர்ண சம்மதத்தையும், பொது மக்களின் ஒப்புதலையும் பெற்றவுடன்தான் அரசியல் அமைப்பு முறைகள் அமுலுக்குக் கொண்டுவரப்படும். இந்த அரசியல் அமைப்பு மன்றத்தின்மூலம் சென்னை மாகாணத்திலுள்ள நான்கு வட்டாரங்களும் தங்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் திராவிடக் குடியரசின் அரசியலை அமைத்துக்கொள்ளலாம். ஆகவே, ஆந்திர, கேரள, கர்னாடக தோழர்கள் திராவிடநாடு கிளர்ச்சியை ஆதரித்து, விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளவேண்டியது இன்றியமையாதது.

(தொடரும்)

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை